விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 15 சனிக்கிழமை (01.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

## பெற்றோல், டீசல் விலைகள் ஐந்து ரூபாயால் குறைப்பு

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் தலா 5 ரூபாயால் குறைக்கப்படுகிறது என்று நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 24

## மென்பானங்களின் விலைகள் 30% திடீர் குறைப்பு

(கொழும்பு)

சீனியின் அளவின் அடிப்படையில் சோடா உள்ளிட்ட குளிர்பானங்களுக்கு விதிக்கப்பட்ட வரி 30 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்மூலம் சோடா 23

## மகிந்தவுக்கு எதிரான வழக்கு திங்கள் வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாத மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 24

## சண்டிலிப்பாயில் இளைஞன் மீது கத்தி வெட்டு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞரை வழிமறித்து மோட்டார் சைக்கிளை பறிக்க முற்பட்ட இனந்தெரியாத நபர்கள் இருவர் அவரை கத்தியால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ள சம் 23

அரசியல் கைதிகளின் விடுவிப்பு

## கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கிறார் மைத்திரி

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் பொறிமுறை ஒன்றின் கீழ் விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை பேச்சுக்கள் இடம்பெறவுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நேற்று 23

மட்டக்களப்பு வவுணதீவில்

## கைகள் கட்டப்பட்ட நிலையில் இரு பொலிஸார் சுட்டுக்கொலை



விரிவான செய்தி 3-ம் பக்கம்

## எதிர்வரும் டிசம்பர் ஐந்தாம் திகதி

# பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டால் புதிய பிரதமர்!

## கூட்டமைப்பிடம் ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு) மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரும் பிரேரணை எதிர்வரும் 5-ம் திகதி வாக்கெடுப்பில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் புதிய பிரதமரை நியமிப்பேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

## அமைச்சுக்களின் நிதி இடைநிறுத்தம் பிரேரணை 122 வாக்குகளால் நிறைவேற்றம்

பாராளுமன்றம் டிசம்பர் 5 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசின் அமைச்சர்கள் மற்றும் அவர்களின் பிரத்தியேக அலுவலர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள், வசதிகளை இடைநிறுத்துவது தொடர்பான பிரேரணை பாராளுமன்றில் நிறை வேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 122 உறுப்பினர்கள் வாக்களித்தனர். எதிராக எந்தவொரு வாக்கும் அளிக்கப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் பிரதமர் செயலகத்துக்கான நிதிஒதுக்கீட்டை இரத்துச் செய்வதற்கான பிரேரணை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. அடுத்த கட்டமாக அமைச்சர்களின் செயற்பாட்டை முடக்கும் பிரேரணை நேற்று நிறைவேற்றப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். 23

## மகிந்தவை பிரதமர் பதவியிலிருந்து எவராலும் மாற்ற முடியாது

எஸ்.பி.திஸாநாயக்க திட்டவட்டம்

(கொழும்பு)



இலங்கையின் தற்போதைய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ உள்ள போது அவரது பதவிக்கு வேறு ஒருவரை இனி ஒருபோதும் நியமிக்க முடியாதென அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாக 23

## தமிழர்களுக்கு தீர்வு இல்லாமல் போனமைக்கு த.தே.கூவே காரணம்

பந்துல குணவர்த்தன எம்.பி சாடல்



(கொழும்பு)

தமிழர்களுக்கு இதுவரை தீர்வு கிடைக்காமல் போனமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற வளாகத்தில் 23

## ஆவா குழுவைச் சேர்ந்த மூவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது

3 அடி நீளமான 7 வாள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பெரும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தேடப்பட்டு வந்த ஆவா குழுவைச் சேர்ந்த மூவர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் 3 அடி நீளமுள்ள 7 வாள்களும் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அண்மையில் வடமராட்சி இமையாணன் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் மீது தாக்கப்பட்ட சம்பவத்துடன் சந்தேகநபர் மூவருக்கும் தொடர்புள்ளமை 23

அரசியல் சர்ச்சைக்கு மத்தியில்

## ரணில் - மகிந்த சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. குறித்த சந்திப்பு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள் 23

# புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு – சுமந்திரன்

அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படும் இணக்கப்பாட்டின் மூலமே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வினை அடைய முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடரபாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு நாட்டினுடைய அரசியலமைப்பை எவர் நினைத்தாலும் மீறமுடியும் என கருதினால் நாம் எதிர்பார்க்கும் நிரந்தரத் தீர்வினை அடைய முடியாது. நாம் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முன்னதான நிலைக்கு ஆட்சி மாற்றப்பட வேண்டும் என்பதை உறுதியாகத் தெரிவித்துள்ளோம்.

இந்நிலையில் ஜனாதிபதியால் பிரதமராக நியமிக்கப்பட்ட ஒருவர் கடந்த ஒரு மாதமாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினை நிரூபிக்கத் தவறியுள்ளார்.

எனவே இனிமேலும் நாங்கள் பேசாது இருக்கக்கூடாது என்பதனை நாங்கள் குறித்த கடிதத்தில் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளோம். அத்துடன் நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை மாறவேண்டும் என்பதற்காகவே பொறுப்பான பிரதான எதிர்க்கட்சியான நாங்கள் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம்.

அரசியலமைப்பினை மீறுவது என்பது மிகவும் பாரதூரமான விடயமாகும். புதிய அரசியலமைப்பின் மூலமாகவே நாங்கள் நீண்டகாலத் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பது மிகத் தெளிவாக் நாம் சுட்டிக்காட்டுகின்ற விடய்மாகும்" என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)


தென்மராட்சியில்
**Group Classes**
தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் (C-4563)
ஆரம்பம் : 02.12.2018 மு.ப 9.30 மணி
புதிவுகளுக்கு தொடர்பு : 077 722 4994

**றோயல் அக்கடமி**
நாவலர் வீதி, நல்லூர். (இரு இடங்களிலும்) அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
கல்வி ஆண்டு – 2019
**தரம் 6 - O/L வரை**
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்
ஆரம்பம் 05.12.2018, புதன்கிழமை
யாழ் றோயல் - காலை 6.30 மணி
நல்லூர் றோயல் - காலை 7.30 மணி (C-4567)
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது. தொடர்புகளுக்கு 077 664 9134

காரைநகர்
**கிழவன்காடு கலாமன்றம்**
காரைநகர் கிளை யாழ்க்கிளை
**கலைவகுப்புகளுக்கான அனுமதி**
**காரைநகர் கிளையில்**
இன்று தொடக்கம் 01.12.2018 - 25.12.2018 வரை 2019, 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய கலை வகுப்புகளுக்கான அனுமதியும் **யாழ்க்கிளையில்** நடைபெற்றுவரும் கலை வகுப்புக்களில் இன்று முதல் இணைந்து கொள்ள முடியும்.
**நடைபெறும் கலை வகுப்புக்கள்**
அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், வீணை, சித்திரம், நாடகமும் அரங்கியலும், யோகாசனம், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல்
பதிவாளர் காரைநகர் கிளை
பதிவாளர் யாழ் கிளை

**கணித வகுப்பு**
தரம் 6 – 11 வரையான கணித வகுப்பு வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:- 077 817 5794 (6633)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**றாஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: (6635)

நாளை
**அகரம் கல்வி நிலையம்**
(காங்கேயன் துறைச் சாலை)
மல்லாகம் கொக்குவில்
**புதிய கல்வியாண்டு - 2019**
தமிழ், ஆங்கில மொழி மூலமான தரம் 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புக்களும் ஆரம்பம்.
**02-12-2018 ஞாயிற்றுக்கிழமை**
★ தரம் 9,10,11 ⟷ காலை 6.20 மணிக்கும்
★ தரம் 8 ⟷ பி.ப 1.00 மணிக்கும்
★ தரம் 6,7 ⟷ பி.ப 1.50 மணிக்கும்
ஆரம்பமாகின்றன.
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"


# மரண அறிவித்தல்



மண்ணில் 1959 - 10 - 08

விண்ணில் 2018 - 11 - 29

## திருமதி விக்னேஸ்வரி (விக்கி) பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை பெண் பரிசாரகர்)

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி (விக்கி) பாலசுப்பிரமணியம் அவர்கள் 29.11.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஆண் பரிசாரகர்) அன்புத் துணைவியாரும் விநாயகமூர்த்தி (அமரர்), திருநாவுக்கரசு (அமரர்), புவனேஸ்வரி, திலகவதியார், சர்வேஸ்வரி (அமரர்), ஜோகேஸ்வரி, வரதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கார்த்திகா (அவுஸ்திரேலியா), சோபிகா (ஜேர்மனி), ஜசிதரன், தனுஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீப் (அவுஸ்திரேலியா), செந்துரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தீபிகா (ஜேர்மனி), அக்ஷயா அபி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-4554)

வடலியடைப்பு.

தகவல்:- குடும்பத்தினர் 077 243 4049, 021 300 7931

# மரண அறிவித்தல்



## காங்கேசு சிவராசா

வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பூந்தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு சிவராசா 29.11.2018 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காங்கேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துவேலு - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் அருட்செல்வியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராஜேஸ்வரி (சுவிஸ்), இராசலட்சுமி (பிரான்ஸ்), மகாலட்சுமி, தங்கலட்சுமி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் மணிதீபன் (லண்டன்), துவாரகி (பிரான்ஸ்), சுதன், கௌசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவிதா (லண்டன்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கெவின், கோபிதாஸ், கேதானுசன், தன்சிகா, கியூனிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் றமணிசோதி, திருநாவுக்கரசு (அமரர்), தர்மபாலன் (அமரர்), கோபாலபிள்ளை (அமரர்), இராஜேந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் 2ம் வட்டாரம் அம்மன் கோவிலடி வேலணை கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (6634)

2ம் வட்டாரம், அம்மன் கோவிலடி, வேலணை கிழக்கு, வேலணை.


தகவல்:- குடும்பத்தினர் 077 852 4364

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை!

## வவுணதீவில் நேற்று அதிகாலை சம்பவம்

(வவுணதீவு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.






வவுணதீவு வலையிறவு பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் சாவடியில் நேற்று முன்தினம் இரவு பாதுகாப்பு கடமையில், ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கிகளால் குறித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதிக்குச் சென்ற கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபில ஜயசேகர தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடயவியில் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பிரசன்ன, தினேஸ் ஆகிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே உயிரிழந்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி றிஸ்வி இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார். (இ-7)

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை குறித்து விசாரிக்க விசேட குழு மட்டக்களப்புக்கு விரைவு







(வவுணதீவு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரிக்க விசேட குழுவொன்று மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் இந்தக் குழு அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

வவுணதீவு வலையிறவு பாலத்திற்கு அருகிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் இரவு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரண்டு கைகளும் கட்டப்பட்ட நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை!

## துப்பாக்கிகளையும் எடுத்துச் சென்றுள்ளதால் பதற்றம்

(கொழும்பு)

இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவர்களின் இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களிடமிருந்த இரு துப்பாக்கிகளையும் கொலையாளிகள் எடுத்துச்சென்றுள்ளதாகவும் விசாரணைகளில் தகவல் வெளியாகியுள்ளது.



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் வீதி சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த பொலிஸார் இருவரையும் இனந்தெரியாதோர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்து விட்டு அவர்களிடமிருந்த இரு கைத்துப்பாக்கிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை நீலாவணையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தினேஸ் மற்றும் காலியைச் சேர்ந்த பிரசன்னா ஆகியோரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இருவரும் வலையிறவு பாலத்திற்கு அருகில் இருக்கும் பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடிக்கு வழமைபோல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கடமைக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சோதனைச் சாவடிக்கு நேற்றுக காலையில் கடமைக்குச் சென்ற பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் குறித்த இரு பொலிஸாரும் சடலமாக இருப்பதைக் கண்டுள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த போது அவர்களை சுட்டு கொலைக் செய்துவிட்டு அவர்களிடம் இருந்த இரு துப்பாக்கிகளையும் எடுத்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுணதீவு பொலிஸார் மற்றும் புலனாய்வுத் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரிக்க விசேட குழுவொன்று மட்டக்களப்புக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்ட இளம் குடும்பஸ்தர் மரணம்

கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி சரிந்து மரணமடைந்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள விளையாட்டு மைதானம் ஒன்றில் கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சாமுவேல் திருக்குமரன் (வயது-34) மயங்கி சரிந்து மரணமடைந்தார்.

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு நேற்று வெள்ளிக்கிழமை சென்று சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (இ-60)

# 'மகிந்தவுக்கு அதிகாரமோக நோய்'

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு, அதிகார மோக நோய் ஏற்பட்டுள்ளதென்று, ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணியினர், தேர்தலுக்கு ஒருபோதும் அஞ்சப் போவதுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம், சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில், நேற்று முற்பகல் 10.30க்கு கூடியது. இதன்போது, சபாநாயகரின் விசேட அறிவிப்புக்குப் பின்னர், ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவால், மைத்திரி - மகிந்த அரசாங்கத்துக்கு எதிரான பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது.

பொதுமக்களின் பணத்தைக் கொண்டு, அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களது விடயதானங்களுக்காக, எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்யக் கூடாதென்றும் அதற்கு, அமைச்சுகளின் செயலாளர்களுக்கு எவ்வித அதிகாரங்களும் இல்லையென்றும் கூறியே, இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி சங்கநிதி தபானந்தம்



அன்னை மடியில்
09.07.1935

ஆண்டவன் அடியில்
28.11.2018

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கநிதி தபானந்தம் அவர்கள் 28.11.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தபானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளும், செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பதுமநிதி மற்றும் தவநிதி ஆகியோரின் அருமை சகோதரியும், அருணாசலம் (தமிழன் பாசறை, குளப்பிட்டி கொக்குவில்), பழனிவேற்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர்) மற்றும் காலஞ்சென்றவர்களான பவளம்மா, வியாழம்மா, பரமானந்தம், அருளானந்தம் ஆகியோரின் அருமை மைத்துனியும், கிருபவானி (ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் யாழ் கல்வி வலயம்), ஒளிவண்ணன் (கோட்டக்கல்வி அலுவலகம், வேலணை), சோமமாலினி (கனடா), கோகுலவண்ணன், விஜயபாமன் (பிரான்ஸ், முன்னாள் உத்தியோகஸ்தர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (ICRC) கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சரவணபவன் (ராசா) மற்றும் வசந்தமாலினி (ஆசிரியை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), நந்தகுமார் (கனடா), வசந்த றோகினி (தாதிய உத்தியோகஸ்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), சுசிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும், கிருபவன் (பிரான்ஸ்), சாம்பவன், பிரணவன், சாயுக்ஸன், கேதாரணி (முகாமைத்துவ உதவியாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்), தவகேதன், பிரியங்கன் (கன்டா), லதுசன் (கனடா), கோபிராம், கிருஸ்ணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.12.2018 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.59, பொற்பதி வீதி, கொக்குவில்.**

**தொ.பேசி.இல : 021 222 0063**

**தகவல் : குடும்பத்தினர்**

(C-4565)

# இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 700 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள்






(மன்னார்)

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவும் வகையில் லைகாவின் ஞானம் அறக்கட்டளை முன்னெடுக்கும் நிவாரண நடவடிக்கை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மாந்தை மேற்கு மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 700 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு இவ்வாறு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் செ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின் போது மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மற்றும் வறிய 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு உலர் உணவுப் பொதிகள் மற்றும் இதரப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலக அதிகாரிகள், லைகாவின் ஞானம் அறக்கட்டளை நிவாரணக் குழுவினருடன் இணைந்து நிவாரணப்பொருட்களை மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வு மன்னார் பிரதேச செயலகத்தில் நிர்வாக அலுவலகர் ராதா பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-285)

## பொலிஸார் கடும் எச்சரிக்கை

# வாயில் கறுப்புத் துணிகளைக்கட்டி காணாமற்போனோரின் உறவுகள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்





(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் திருகோணமலை மூதூர் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


கோஷங்கள் எழுப்பாமல் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒரு இடத்தில் நிற்காவிட்டால் கைது செய்யப்படுவீர்கள் என பொலிஸாரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட காரணத்தினால் உறவுகள் வாயில் கறுப்புத் துணிகளைக்கட்டி கோஷம் எழுப்பாமல் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சங்கத்தலைவி செல்வராஜா சறோஜாதேவி, இத்தனை வருட காலமாக நாங்கள் 8 மாவட்ட உறவுகளும் சேர்ந்து வீதியில் நின்று போராடி வருகிறோம். எனினும் இலங்கை அரசாங்கம் எந்தவித முடிவும் சொல்லாத நிலையில் நாங்கள் ஐ.நாவை நாடியுள்ளோம். இனியும் காலத்தை வீணடிக்காமல் எங்கள் உறவுகளுக்கான நீதியைப் பெற்றுத்தர இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அதுவரை எமது போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது ஐ.நாவிற்கான மகஜர் மூதூர் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இதில் சுமார் 120 உறவுகள் கலந்து கொண்டனர். (இ-9)

# பாராளுமன்றத்தின் மேன்மை பாதுகாக்கப்பட வேண்டும்

## எரான் எம்.பி.எடுத்துரைப்பு



(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளை தீர்த்து சுபீட்சமான, சக்திமிக்க நாடொன்றை உருவாக்கவே 2015 ஆம் ஆண்டு சகல மக்களும் ஒன்றிணைந்து நல்லாட்சி அரசாங்கத்தை தோற்றுவித்தனர்.

இதற்காக ஜனநாயகம், சட்டவாட்சி மற்றும் பாராளுமன்றத்தின் மேன்மை நிலைநாட்டப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

பணம் மற்றும் பதவிகளுக்காக பாராளுமன்ற உறுப்பினரின் கொள்கைகளை குறைத்து மதிப்பிட முடியாது. ஆகவே கடந்த ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி நாட்டில் காணப்பட்ட அமைதியான ஆட்சியை நிலைநாட்ட ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி ஜனநாயக கொள்கைகளுக்கு மதிப்பளிக்காமல் செயற்படுவது அருவருக்கக் கூடியது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே எரான் விக்ரமரத்ன இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ரணிலையே மீண்டும் பிரதமராக நியமிக்க வேண்டும்-அப்புஹாமி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அரசியலமைப்பிற்கு முரணாக பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர் ரணில் விக்கிரம சிங்க ஆவார். எனவே பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டு மீண்டும் அவரே பிரதமராக நியமிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் சிலர் சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான மாற்றுக் கருத்துக்களுக்கு இணங்க எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதமர் வேட்பாளர் விடயத்தில் மாற்றங்கள் ஏற்படலாம் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாவதற்கு முன்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களால் பரவலாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் எந்தவித உரிய காரணங்களுமன்றி தற்போது பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரம சிங்கவே நீக்கப்பட்டுள்ளார். அரசியலமைப்புக்கு முரணாக பதவி நீக்கப்பட்ட ரணிலையே மீண்டும் பிரதமராக நியமிக்க வேண்டும். எனினும் எதிர்வரும் தேர்தலில் இவற்றில் மாற்றங்கள் ஏற்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், புதிதாக தொடங்க எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும்.

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்:** வேலைச்சுமை கூடும் நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், மருத்துவ செலவுகள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**இராசி பலன்**

| செவ் | கிரகநிலை | ராகு |
|---|---|---|
| கேது | சந்திராஷ்டமம் சதயம் பகல் 12.50 மணிக்கு கன்னி- சந் | சந் |
| சனி | குரு, சூரி | புத, சுக் |

**01.12.2018**

கார்த்திகை 15, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

நவமி மாலை 5.54 மணிவரை

பூரம் காலை 7.18 மணிவரை

உத்தரம் பின்னிரவு 6.03 மணிவரை

சுபநேரம் 3.14-4.44 மணிவரை

இராகுகாலம் 9.14-10.44 மணிவரை

சர்வதேச எயிட்ஸ் தினம்

வளவன்

**கடகம்:** உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குறை சொல்பவர்கள் பாராட்டும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன்கருதிய பயணமொன்று இடம்பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

## மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
தமிழினத்தின் விடுத
லைக்காகப் போராடி உயிர்
நீத்த மாவீரர்களுக்கு யாழ்.
மாநகர சபை அமர்வில்
அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.மாநகர சபை அம
ர்வு நேற்று முன்தினம்
காலை 9.30 மணியளவில்
ஆரம்பமாகியது. இதன்
போது சபை அமர்வின்
ஆரம்பத்தில், உறுப்பினர்
ஒருவர், மண்ணின் விடுத
லைக்காக உயிரிழந்த மாவீ
ரர்களுக்கு அஞ்சலி செலுத்
திய பின்னர், சபை அம
ர்வை ஆரம்பிக்க வேண்டு
மென கோரிக்கை விடுத்
தார்

அதனை முதல்வர் மற்
றும் உறுப்பினர்கள் அனை
வரும் ஏகமனதாக ஏற்று
மாவீரர்களுக்கு அஞ்சலி
செலுத்தினர். (இ-9-101)

## சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும்

யாழ். புன்னாலைக்கட்
டுவன் சித்திவிநாயகர் வித்
தியாலய வருடாந்தப் பரிச
ளிப்பு விழாவும், ஒளிவிழா
வும் இன்று முதலாம் திகதி
சனிக்கிழமை முற்பகல் 10
மணியளவில் பாடசாலை
மண்டபத்தில் அதிபர் க.லோக
ராஜா தலைமையில் நடை
பெறும். இதில் பிரதம விருந்
தினராக யாழ். போதனா
வைத்தியசாலை வைத்திய
கலாநிதி தி.உஷானந், சிற
ப்பு விருந்தினராக வலிகா
மம் வலய முகாமைத்துவப்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
சி.மதியழகன், உரும்பிராய்
பங்குத் தந்தை வணபிதா
மடுத்தீன் பத்திநாதர், கௌரவ
விருந்தினராக பாடசாலை
நலன்விரும்பி திருமதி.
இராஜேந்திரம் மகாலஷ்மி
ஆகியோர் கலந்து கொள்
வர். (இ-5)

## கால்நடைகள் திருட்டு அதிகரிப்பு!
## பாதுகாப்புக்குழுக் கூட்டத்தை கூட்டி பொலிஸாரிடம் முறையிட்ட மக்கள்

(வரணி)
கொடிகாமம் பொலிஸ்
நிலையப் பிரிவிற்குட்பட்ட
வரணி மாசேரி கிராமத்தில்
அண்மைக்காலமாக கால்
நடைகள் திருடப்படும் சம்ப
வங்கள் அதிகரித்துக் காண
ப்படுகின்றன.

இது தொடர்பாக மாசேரி
கிராம அபிவிருத்திச் சங்கத்
தின் கொடிகாமம் பொலிஸ்
நிலையப் பொறுப்பதிகாரி
யிடம் தெரியப்படுத்தியதோடு
இதுதொடர்பாக சிவில் பாது
காப்புக் குழுக்கூட்டம் ஒன்
றினையும் ஒழுங்குபடுத்
தியிருந்தனர். இக் கூட்டமா
னது நேற்று முன்தினம்
வியாழக்கிழமை முற்பகல்
10 மணிக்கு மாசேரி கிராம
அபிவிருத்திச் சங்க மண்ட
பத்தில் க.விஜயகாந்தன் தலை
மையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்திற்கு கொடி
காமம் பொலிஸ் நிலைய
குற்றத் தடுப்புப் பிரிவு பொறு
ப்பதிகாரி மற்றும் பொது
மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராமத்திற்குப் பொறுப்பான
பொலிஸ் உத்தியோகத்தர்
கள் போன்றோர் கலந்து
கொண்டனர்.

இதிலே பொதுமக்கள்
தமது கருத்துக்களை தெரி
வித்ததுடன் விழிப்புக்குழுக்
களை உருவாக்க வேண்
டும் எனவும் கோரிக்கை
விடுத்தனர். அத்துடன் பகல்,
இரவு வேளைகளில் விசேட
ரோந்து நடவடிக்கைகளை
யும் பொலிஸார் கிராமத்தில்
மேற்கொள்ள வேண்டும் என
வும் வேண்டுகோள் விடுத்த
னர். இவற்றை நாம் மேற்
கொள்வதாக பொறுப்பதி
காரி தெரிவித்தனர். (இ-103)

## ஒருவர் உயிரிழப்பு
# யாழ்.குடாநாட்டில் 15 பேர் எலிக்காய்ச்சலால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் 15 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

எலிக்காய்ச்சல் (லெப்
டோஸ்பிரோசிஸ்) என்பது
விலங்கு வழி நோயாகும்.
இது மனிதர்கள் உட்பட
பாலூட்டிகள், பறவைகள்
போன்றவையையும் பாதிக்கி
றது. இந்தத் தொற்று பொது
வாக விலங்கு சிறுநீர் அசுத்
தம் பட்ட நீர் மனிதர்களின்
தோல், கண்கள் ஆகியவற்
றில் குணமடையாத புண்
கள் ஆகியவற்றில் படுவ
தன் மூலமாக ஏற்படுகிறது.

இந்த நோயானது ஒரு
மனிதனிடம் இருந்து இன்
னொரு மனிதனுக்குத் தொற்
றுவதில்லை. இந்த நோயால்
பாதிக்கப்பட்ட விலங்கின்
சிறுநீரில் இருந்து பரவுகி
றது. மேலும் அது ஈரப்பதம்
அதிகமாக இருக்கும் இடங்
களில் துரிதமாகத் தொற்றிக்
கொள்கிறது.

எலிகள் மற்றும் கள
எலிகள் ஆகியவை அடிப்ப
டைக் காரணங்களாக இரு
ந்த போதும் ஏனைய பாலூ
ட்டிகளும் இது பரவ காரண
மாக இருக்கின்றன. பாதிக்
கப்பட்ட பக்றீரியாவை கடத்
துவதற்கு சாத்தியமுள்ள
வாழ்விடங்களின் வகை
களாக சேறு நிரம்பிய ஆற்
றங்கரை,வயல், சாக்கடை
கள், அடுப்பு இடுக்குகள்,
சேறு நிரம்பிய கால்நடை
வளர்ப்புப் பகுதிகள், களஞ்
சிய அறைகள் போன்றவை
இருக்கின்றன.

மனிதர்களுக்கு இந்த
பாதிக்கப்பட்ட விலங்குக
ளின் சிறுநீர் பட்ட நீர்,
உணவு அல்லது மண் ஆகிய
வற்றின் மூலமாக பாதிப்பு
ஏற்படலாம். மேலும் இது
அசுத்தமான உணவு மற்
றும் நீரினை விழுங்குதல்
அல்லது தோலில் படுதல்
மூலமாக ஏற்படலாம்.

நீர் நிலைகளில் குளிக்கும்
போது அசுத்தமான நீரை
விழுங்கிவிடுதல், கண்கள்
அல்லது மூக்கின் மீது அசு
த்தமான நீர் தெறித்தல்
அல்லது நோய் தொற்றிய நீர்
திறந்த காயப்பகுதிகளில்
படுதல் ஆகியவை காரண
மாக நோய் ஏற்படலாம்.
இந்த நோய்த்தொற்று,
ஏற்பட்ட நபர்களுக்கு ஆரம்
பத்தில் எந்த அறிகுறிகளும்
ஏற்படாமலும் இருக்கலாம்.

,காய்ச்சல் போன்ற அறி
குறிகள் (காய்ச்சல், தசை வலி
கள், ஆழ்ந்த தலைவலி)
உடன் ஆரம்பமாகும் பைபா
சிக் நோயாக இருக்கிறது.
முதற்கட்டமாக குணப்ப
டுத்திய பிறகு நோயாளிக்கு
இரண்டாவது கட்டம் ஆரம்
பிக்கும் வரை அறிகுறியில்
லாமல் இருக்கும். மூளை
உறையழற்சி, கல்லீரல்
பாதிப்பு (ஜாண்டிசுக்குக்
காரணமாகிறது) மற்றும்
சிறுநீரகச் செயலிழப்பு போன்
றவை இதன் பண்புகளாக
இருக்கின்றன.

இதன் அறிகுறிகள் அதி
கமான காய்ச்சல், தீவிர
தலைவலி, தசை வலிகள்
மற்றும் வாந்தியெடுத்தல்
உள்ளிட்டவை சிவந்த
கண்கள், அடிவயிற்று வலி,
வயிற்றுப்போக்கு மற்றும்
தடித்தல் உள்ளிட்டவை
ஏற்படலாம்.

மனிதர்களில் அறிகுறி
கள் 4 முதல் 14 நாள் வரை
யிலான நோய்ப்பாதிப்புக்
காலங்களுக்குப் பிறகு தோன்
றலாம். மேலும் மூளை
உறையழற்சி, மிகுதியான
சோர்வு, காது கேளாமை,
மூச்சுத்திணறல், இரத்த
யூரியாமிகைப்பு மற்றும்
சிறுநீரக இடைத்திசுக் குழல்
வடிவ திசுப்பகுதி அழுகல்
உள்ளிட்ட சிக்கல்கள் ஏற்பட
லாம். இதன் விளைவாக
சிறுநீரகச் செயலிழப்பு மற்
றும் பொதுவாக கல்லீரல்
செயலிழப்பு ஏற்படலாம்.

குறித்த காய்ச்சல் தொடர்
பாக யாழ். போதனா வைத்
தியசாலை வைத்தியர் கமலா
ஜெகு தெரிவிக்கையில்,
ஆரம்பத்தில் காய்ச்சல்
இருந்தவுடன் உடனடியாக
வைத்தியசாலை சென்று
பரிசோதனை செய்வது அவசி
யம், யாழ்ப்பாணத்தில் குறி
த்த நோயைக்கண்டறிவதற்
கான பரிசோதனை முறை
இல்லாத காரணத்தினால்
இரத்த மாதிரிகள் கொழும்
புக்கு அனுப்பப்பட்டு பெறு
பேறுகள் பெறப்படுகின்
றன.

2008 ஆம் ஆண்டள
வில் தான் இலங்கையில்
இந்த நோய் தொற்று அதிக
ளவில் காணப்பட்டது. யாழ்ப்
பாணத்தில் குறித்த நோய்
தொற்று அதிகளவில் காண
ப்படாத பட்சத்திலும் தென்பகு
தியில் இருந்து வருபவர்கள்
இந்த நோயினால் அதிகள
வில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்
எனத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில்
இந்த வருடம் இந்த நோய்த்
தொற்றுக்கு உள்ளாகிய 15
பேரில் 14 பேர் உரிய முறை
யில் சிகிச்சை பெற்று நலம
டைந்துள்ளனர் என்பது
குறிப்பிடத்தக்கது. (இ-9)

## தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத் தமிழ்ச்
சங்கமும் கரிகணன் பதிப்
பகமும் இணைந்து முன்
னெடுக்கும் நாவலர் விழா
இன்று சனிக்கிழமை மாலை
4 மணி முதல் இரவு 7
மணிவரை நல்லூர் ஸ்ரீ
துர்க்காதேவி மணி மண்ட
பத்தில் நடைபெறும்.

யாழ். சக்சபோன் பிறத
ர்ஸ் வழங்கும் நாதசங்
கமம், கலைவாணர் வில்
லிசைக் குழுவினரின் ஆறு
முகநாவலர் என்ற பொரு
ளில் அமைந்த வில்லிசை
ஆகிய கலை நிகழ்வுகளும்
இடம்பெறும். (இ-7)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள்





(சாவகச்சேரி)
அண்மையில் பெய்த
கடும் மழை மற்றும் காற்
றினால் பாதிக்கப்பட்ட மக்க
ளுக்கு வவுனியா ஞானம்
அறக்கட்டளை நிலையத்தி
னர் உலர் உணவுப்பொருட்
கள் உள்ளிட்ட அத்தியா
வசியப் பொருட்களை நேற்று
முன்தினம் வியாழக்கிழமை
தென்மராட்சி பிரதேச செய
லகத்தில் வைத்து வழங்
கினர். தென்மராட்சிப் பிர
தேச செயலர் தேவந்தினி
பாபு தலைமையில் இடம்
பெற்ற இந் நிகழ்வில் சாவகச்
சேரி கோவிற்குடியிருப்பு பகு
தியிலுள்ள மகிழங்கேணி
மற்றும் உதய சூரியன் கிராம
மக்கள் பயனாளிகளாகத்
தெரிவு செய்யப்பட்டு அவர்க
ளுக்கு உலர் உணவுப் பொதி
கள் உள்ளிட்ட அத்தியாவசி
யப் பொருட்கள் வழங்கப்பட்
டன.

கோவிற்குடியிருப்பு கிராம
உத்தியோகத்தர் பிரிவைச்
சேர்ந்த 50 குடும்பங்களு
க்கு இரண்டு இலட்சம்
ரூபாய் பெறுமதியான பொரு
ட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டங்
கள் யாழ்.மாவட்ட சிரேஷ்ட
பொலிஸ் அத்தியட்சகர் கணேச
நாதனின் ஏற்பாட்டில் தென்
மராட்சிப் பகுதியில் நடை
முறைப்படுத்தப்பட்டன.

அரிசி,சீனி,மீன் ரின்,
தேயிலை, சோயா உள்ளி
ட்ட உலருணவுப் பொருட்
களுடன் நுளம்புவலை,
போர்வை ஆகியனவும் வழ
ங்கப்பட்டன.

இந் நிகழ்வில் யாழ்.
மாநகர சபை முதல்வர்
இ.ஆனல்ட்,யாழ் மாவட்ட
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்
சகர் கணேசநாதன், சாவகச்
சேரி நகர சபைத் தவிசாளர்
சிவமங்கை, முன்னாள்
மாகாணசபை உறுப்பினர்
கே.சயந்தன், யாழ்.மாவட்ட
அனர்த்த முகாமைத்துவப்
பணிப்பாளர், ஞானம் அறக்
கட்டளை நிலைய இணைப்
பாளர்கள், கோவிற்குடியிரு
ப்பு கிராம உத்தியோகத்தர்
கார்த்திகேயன் மற்றும்
சாவகச்சேரி நகரசபை உறுப்
பினர் சுபோதினி ஆகியோர்
கலந்து கொண்டு நிவார
ணப் பொதிகளை வழங்கி
னர்.

ஞானம் அறக்கட்டளை
நிலையத்தினர் வடக்கு-
கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்
கப்பட்ட மக்களுக்கென நான்கு
கோடி ரூபாய் நிதியை ஒது
க்கி இருப்பதாகவும், யாழ்
மாவட்டத்தின் ஏனைய பகு
திகளிலும் வெள்ளத்தால்
பாதிக்கப்பட்ட மக்களுக்கு
எதிர்வரும் தினங்களில்
நிவாரணப் பொதிகள் வழ
ங்கப்படும் எனவும் தெரி
வித்துள்ளனர். (இ-30)

## கலாசார விழா

(யாழ்ப்பாணம்)
வடமாகாண பண்பாட்ட
லுவல்கள் திணைக்களம்
மற்றும் கலாசார அலுவல்கள்
திணைக்கள அனுசரணை
யுடன் வலி. தென்மேற்கு பிர
தேச கலாசாரப் பேரவையும்
கலாசார அதிகார சபையும்
பிரதேச செயலகமும் இணை
ந்து நடத்தும் கலாசார விழா
2018 எதிர்வரும் 4 ஆம்
திகதி செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 2 மணியளவில்
வலி.தென்மேற்கு, (மானிப்
பாய்) பிரதேச சபை மண்ட
பத்தில் வலி.தென்மேற்கு
பிரதேச செயலாளரும் கலாசா
ரப் பேரவை மற்றும் கலா
சார அதிகார சபைத் தலை
வருமான திருமதி யசோதா
உதயகுமார் தலைமையில்
நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம
விருந்தினராக யாழ். மாவ
ட்ட செயலக மேலதிக அரசா
ங்க அதிபர் திருமதி சுகு
ணரதி தெய்வேந்திரம், சிற
ப்பு விருந்தினர்களாக வலி.
தென்மேற்கு, மானிப்பாய்
பிரதேச சபைத் தவிசாளர்
அ.ஜெபநேசன், வடக்குமாகாண
கல்வி அமைச்சின் பிரதிக்
கல்விப் பணிப்பாளர் (நிர்
வாகம்) நா.கந்ததாசன்,
கௌரவ விருந்தினர்களாக
யாழ். மாவட்ட கலாசார
உத்தியோகத்தர் இ.கிருஷ்
ணகுமார், மாதகல் மூத்த
கலைஞர் ம.அகஸ்ரீன் ஆகி
யோர் கலந்து கொள்வர். (இ-5)

## ஆலயத்தில் பொருட்கள் திருட்டு

(கரணவாய்)
வடமராட்சி செம்பியன்
பற்று மானியவளை கண்
ணகி அம்மன் ஆலயத்தில்
கடந்த புதன்கிழமை நள்
ளிரவு பொருட்கள் திருடப்பட்
டுள்ளன.

அங்கிருந்த தண்ணீர்
மோட்டார், கோவிலின்
தளபாடங்களும் திருடப்
பட்டதுடன் அப்பகுதியிலு
ள்ள வீடு ஒன்றில் இருந்த
துவிச்சக்கரவண்டியும் திரு
டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருதங்
கேணி பொலிஸ் நிலைய
த்தில் முறைப்பாடு செய்யப்
பட்டுள்ளது. (இ-60)

# உலக எயிட்ஸ் தினம் இன்று

1988 ஆம் ஆண்டில் இருந்து உலக சுகாதார நிறுவனம், டிசெம்பர் முதலாம் திகதி 'உலக எயிட்ஸ் தினம்' என் அனுஷ்டித்து வருகிறது. உலக அளவில் 3 கோடியே 67 இலட்சம் பேர் எச்.ஐ.வி. பாதிப்போடு வாழ்கிறார்கள் அவர்களில் 18 இலட்சம் பேர் குழந்தைகள்' 2015 ஆம் ஆண்டுக்கான ஒரு புள்ளிவிபரம். அதே 2015 ஆம் ஆண்டில் தான் 11 இலட்சம் பேர் எயிட்ஸ் பாதிப்புக்குள்ளாகி இறந்துபோயிருக்கிறார்கள்.




வருவாயில் பின்தங்கிய மற்றும் நடுத்தர நாடுகளில் தான் பெரும்பான்மையானோர் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு தினத்தை நினைவுபடுத்தி அனுஷ்டிப்பதன் நோக்கம். அதற்கான முக்கியத்துவத்தை எல்லோருக்கும் உணரவைப்பதாகும். மருத்துவம், தொழில்நுட்பம் எனப் பல துறைகளில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுவிட்ட இன்றைய சூழலில் நமக்குத் தேவை, எயிட்ஸ் மற்றும் எச்.ஐ.வி குறித்த போதிய விழிப்புணர்வு. முறையான விழிப்புணர்வுடன் செயற்படும் போது கொடிய நோய்களின் தாக்கத்திலிருந்து தப்பிக்கலாம்.

### நம்பிக்கைகளும் உண்மைகளும்

குறிப்பாக, எச்.ஐ.வி.எப்படிப் பரவும், எப்படிப் பரவாது என்பதைத் தெரிந்து கொண்டாலே எயிட்ஸ் வராமல் நம்மை காத்துக்கொள்ள முடியும். அதற்கு எயிட்ஸ் குறித்து நிலவும் தவறான நம்பிக்கைகள் களையப்பட வேண்டும். எயிட்ஸ் குறித்த சில நம்பிக்கைகளையும், உண்மை நிலை என்ன என்பதையும் பார்ப்போம்.




### நம்பிக்கை

எயிட்ஸ் நோய் வந்தால் காப்பாற்றவே முடியாது. உடனடி மரணம் நிச்சயம்' என்கிற பயமுறுத்தல்.

### உண்மை

இன்றைக்கு மருத்துவத் துறையில் அபரிமிதமான தொழில்நுட்பம் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழலில்கூட எயிட்ஸை முழுமையாக குணப்படுத்த முடியாது என்கிற நிலையே நிலவுகிறது. அதே நேரத்தில், எயிட்ஸைக் கட்டுப்படுத்தவும், எயிட்ஸின் காரணமாக ஏற்படும் பிற நோய்களைக் குணப்படுத்தவும் மருந்து உள்ளது. இதனால், எயிட்ஸால் பாதிக்கப்பட்ட ஒருவரின் ஆயுளை நீடிக்கச் செய்ய முடியும். எனவே, எயிட்ஸ் என்றாலே உடனே மரணம் ஏற்பட்டுவிடும் என்று பயப்படத் தேவையில்லை.

### நம்பிக்கை

எச்.ஐ.வி.தொற்று உள்ளவருடன் கைகுலுக்குதல், முத்தமிடுவது கூடாது. அதன் மூலம் எச்.ஐ.வி பரவும்.

### உண்மை

எச்.ஐ.வி தொற்று உள்ளவருடன் கைகுலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல் மற்றும் முத்தமிடுதல், அவர் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள், படுக்கை, உடைகளைப் பயன்படுத்துவது ஆகியவற்றால் எச்.ஐ.வி. மற்றவருக்குப் பரவாது. எச்.ஐ.வி பாதிப்பு உள்ளவரின் இருமல், தும்மலாலும், அவரைக் குத்திய நுளம்பு பிறரைக் குத்தினாலும் கூட பரவாது. எச்.ஐ.வி.தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளுதல், எச்.ஐ.வி. தொற்றுள்ள இரத்தம் மற்றும் ஊசியை பயன்படுத்துதல் போன்றவற்றால் எச்.ஐ.வி பரவும். எயிட்ஸ் நோயாளி தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவவும் வாய்ப்பு உள்ளது.

### நம்பிக்கை

எச்.ஐ.வியும் எயிட்ஸும் ஒன்றுதான் . எச்.ஐ.வி வந்தாலே எயிட்ஸ் தாக்குதலிலிருந்து தப்பிக்க முடியாது.

### உண்மை

எச்.ஐ.வி.வைரஸ் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு செல்களைப் பாதித்து அழிக்கும். இது எயிட்ஸ் என்ற நிலையை அடைய மூன்று முதல் 15 ஆண்டுகள் வரை கூட ஆகும். அதாவது, எச்.ஐ. வி பாதிப்பின் முற்றிய நிலைதான் எயிட்ஸ். அது, உயிரைப்பறிக்கக் கூடிய மிக மோசமான நிலை. ஆனால், எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒரு வரை, எயிட்ஸ் நிலையை அடையவிடாமல் தடுக்க முடியும். இது, நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஆரோக்கியநிலை சிடி-4 செல்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது.

பரிசோதனைக்கான மாதிரி இரத்தத்தில் சிடி-4 எண்ணிக்கையைக் கொண்டு எச்.ஐ.வி., எயிட்ஸ் நிலையை அறிந்து கொள்ளலாம்.

எயிட்ஸ் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியது அவசியம். அதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதி ஏற்போம். எதிர்காலச் சந்ததியினருக்காகவாவது உயிர்க்கொல்லிக்கு வைப்போம் ஒரு முற்றுப்புள்ளி!

## தம்புதோட்டம் கச்சாய் கடற்பரப்பில் ஒரு தொகைக் கைக்குண்டுகள்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரி தம்புதோட்டம் கச்சாய் கடற்பரப்பில் ஒரு தொகை கைக்குண்டுகள் பொது மக்களால் அடையாளம் காணப்பட்டு சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் பொதுமக்களால் அடையாளம் காணப்பட்ட கைக்குண்டுகள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பின்னர் கைக்குண்டுகள் அகற்றப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெருந்தொகை கைக்குண்டுகள் காணப் பட்டதால் பொதுமக்களிடத்தில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.(இ-30)

## அமைச்சரவையில் பங்கெடுத்து ஒரு மாதத்தில் பத்து அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிப்பு

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஆட்சியில் பங்கெடுத்து ஒரு மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் பத்துக்கும் மேற்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்து அதை நடைமுறைப்படுத்தியுமுள்ளேன் என ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சத்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முக்கிய மாக அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஒரு இலட்சத்து 10 ஆயி ரம் வீடுகளை அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளதால் அதற்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு இழப்பீடுகளை வழங்கி வருகின்றோம்.

பல ஆண்டுகளாக கோரிக்கையாக இருந்த சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனம் செய்துள்ளோம். அதுமட்டுமல்லாது வடக்கிற்கு விசேடமாக வடக்கு அபிவிருத்தி அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்தவுள்ளோம். மேலும் தொழில் வாய்ப்புக்கள் இன்றி காணப்படும் எமது இளைஞர்கள், யுவதிகளுக்கு ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதேபோல வடக்கு, கிழக்கிலுள்ள குளங்களைப் புனரமைக்கவும், நிலத்தடி நீரைப்பாதுகாக்கவும் திட்டங்களை வகுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு சிறப்பு நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும்

### யாழ்.மாநகர சபை உறுப்பினர் செல்வவடிவேல்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கால நிலை மாற்றங்களால் வட பகுதி குறிப்பாக யாழ்.மாவட்டம் இயற்கை அனர்த்தங்களின் தாக்குதலுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் கூறு கின்றன. எனவே இயற்கை அனர்த்தங்களிலிருந்து எமது மக்களையும் பிரதேசங்களையும் பாதுகாக்க நாம் திட்டங்களை உருவாக்கி அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் முதல்வர் இ. ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக அண்மைய ஆண்டுகளில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது யாழ்.மாவட்டத்தின் காங்கேசன்துறையை அண்டிய பகுதியை அண்மித்ததாகப் பல தாழமுக்கங்கள் உருவாகியிருப்பதை காண முடிகின்றது.

இந்நிலைமைகளால் வடபகுதியில் குறிப்பாக எமது யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இதன் தாக்கங்கள் உணரப்பட்டுள்ளன.

அந்தவகையில் எதிர் காலத்தில் ஏற்படவுள்ள இத்தகைய இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்திரலிருந்து எமது மக்களை பாதுகாப்பதற்காக தயார்படுத்தல்களுடன் அதற்கான விசேட மீட்பு அணியொன்றையும் உரு வாக்கிக்கொள்ள நாம் இந்த வரவு- செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்து கொள்ள வேண்டும் என்றார்.(இ-7)

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியம் காப்போம்.

நம்பிக்கை இழக்க வேண்டாம்.

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)

077 900 8776 (தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1993 இல் பிறந்த சைவ போசனம் மட்டும் உடைய பட்டதாரி ஆசிரியை கிரக பாவம் 17 3/4, 12 இல் செவ்வாய் பூரட் டாதி 3 ஆம் பாதம் உடைய மணமக ளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 172 6839

## கலைவிழாவும் மாணவர் கௌரவிப்பும்

தெல்லிப்பழை லிற்றில் மாஸ்டர் போட்டி மொண்டசறியின் கலைவிழாவும் மாணவர் கௌரவிப்பும் நிகழ்வு இன்று முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் மருதனார்மடம் வட இலங்கைசங்கீத சபை மண்டபத்தில் கி.சதீஸ்குமார் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இதில்பிரதம விருந்தினராக யாழ்.வறுத்தலைவிளான்அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எஸ். திலகதீபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியை திருமதி. நி.அமிர்தினி, யாழ்.தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியை திருமதி.சி.மைதிலி, தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமணசேகரா, லிற்றில் மாஸ்டர் மொண்டசறி முன்னாள் தவிசாளர் திருமதி. சா.மைதிலி, கௌரவ விருந்தினர்களாக லிற்றில் மாஸ்டர் மொண்டசறி ஆசிரியர்கள் இ.திவ்வி யப்பிரியா (மல்லாகம்), த.சங் கீதா (புத்தூர்), பொ.சகாயினி (வட்டுக்கோட்டை) ஆகியோர்கலந்து கொள்வர். (இ-5)

# வவுனியாவில் விபச்சாரத்தினால் எச்.ஐ.வி.தொற்று பரவுகிறது

## பாலியல் நோய்த்தடுப்பு வைத்திய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(குருமன்காடு)

**வவுனியாவில் விபச்சாரம் காரணமாக அதிகமாக எச்.ஐ.வி.தொற்று ஏற்பட்டு வருகிறது. இதுவரை எச்.ஐ.வி. தொற்றினால் 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 13 பேர் மரணித்துள்ளதாக வவுனியா மாவட்ட பாலியல் நோய்த்தடுப்பு வைத்திய பொறுப்பதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**



வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள பாலியல் நோய் தடுப்பு பிரிவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக எயிட்ஸ் தினம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நாடாளவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது. அந்தவகையில் இலங்கையில் இம்முறை ஒவ்வொருவரும் தனக்கு எச்.ஐ.வி உள்ளதா என பரிசோதனை செய்து அறிவதன் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் அதனை முற்றாக ஒழித்தல் எனும் தொனிப் பொருளில் நடைபெறுகிறது.

வவுனியாவில் பாலியல் நோய் தடுப்பு பிரிவு எயிட்ஸ் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகிறது. 2003 ஆம்ஆண்டு தொடக்கம் இன்று வரை வவுனியாவில் 20 எயிட்ஸ் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதில் 2018 ஆம் ஆண்டு ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இதில் 7 பேர் மட்டுமே உயிருடன் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக மருந்து பாவிப்பதன் ஊடாகவே உயிர் வாழ்கின்றனர்.

இந்த எச்.ஐ.வி. மூன்று முறைகளில் வேகமாக பரவுகிறது. எச்.ஐ.வி. தொற்று உள்ளவர்களுடனான பாலியல் ரீதியான தொடர்புகள், எச்.ஐ.வி தொற்று உள்ளவர்களின் இரத்தம் பிறிதொரு நபருக்கு மாற்றுதல், எச்.ஐ.வி தொற்றுள்ள ஒரு அம்மாவுக்கு பிறக்கும் குழந்தை என்பவற்றின் ஊடாக பரவி வருகின்றது.

ஆனால், வவுனியாவை பொறுத்தவரை விபச்சாரம் காரணமாகவே எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டு வருகிறது. இதனை இனங்காண ஒன்று தொடக்கம் மூன்று மாதங்கள் தேவை. அந்த இடைவெளிக்குள் அவர்கள் மூலம் பலருக்கும் தொற்றி விடுகிறது எனத்தெரிவித்தார். (2-250)

### வடமாகாண சித்திரப் போட்டியில்

# கறுக்காய்த்தீவு ம.வித்தி மாணவன் முதலாமிடம்

(பூநகரி)

கிளிநொச்சி கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் சி.ஹரி கிருஸ்ணா, இலங்கை வங்கியினால் நடத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான சித்திரப் போட்டியில் 5 ஆம் பிரிவில் பங்குபற்றி வடக்கு மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்று 25 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொண்டதாக பாடசாலை அதிபரினால் தெரிவிக்கப்படுகின்றது.

அதே பாடசாலையைச் சேர்ந்த ஸ்ரீ கனிநிலவன் 4 ஆம் பிரிவில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று 15 ஆயிரம் ரூபாவை பரிசாகப் பெற்றுக்கொண்டார். கல்வி அமைச்சும் தேர்தல் திணைக்களமும் இணைந்து நடத்திய தேசிய சித்திரப் போட்டியில் க.பொ.த உயர்தரத்தைச்சேர்ந்த க.கனிஸ்ரன் தேசிய 'மட்டத்தில் சிறப்புப் பரிசைப் பெற்றுள்ளார்.

டெங்கு ஒழிப்பு சித்திரப் போட்டியில் மாவட்ட மட்டத்தில்பி.மணிகண்டன் முதலாம் இடத்தைப் பெற்று 10 ஆயிரம் ரூபாவை பரிசாகப் பெற்று தங்கள்பாடசாலைக்குபெருமை தேடித் தந்தவர்களும் சித்திர பாட ஆசிரியரும் அண்மையில் நடைபெற்ற விழாவில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)




# வீட்டில் புதைக்கப்பட்ட சிசு மீட்பு

## விளாத்திக்குளத்தில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

வீட்டில் பிறந்த சிசு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை விளாத்திக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கர்ப்பிணியான தாய் சிசுவை வீட்டிலேயே பிரசவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

சிசு உயிரிழந்த நிலையில் பிறந்தமையால் அதனை நிலத்தில் புதைத்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த சிசுவை மீட்டெடுத்துள்ளனர். சிசுவின் தந்தையை கைது செய்துள்ளதுடன் தாய் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டம் உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அமர்வு நேற்றுக்காலை 9 மணிக்கு தவிசாளர் க.தவராசா தலைமையில் நடைபெற்றுள்ளது.

வரவு-செலவு திட்டத்தின் மீண்டுவரும் வருமானமாக 94.22 மில்லியன் ரூபாவும், மீண்டுவரும் செலவீனங்களாக 71.59மில்லியன் ரூபாவும், மூலதன செலவீனங்களுக்காக 22.63 மில்லியன் ரூபாவும், மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மூலதன செலவீனங்களில் நூல்கொள்வனவு, வீதிவிளக்குகள் கொள்வனவு, அலுவலக உபகரண கொள்வனவு,சிறுவர் பூங்கா புனரமைப்பு,குழாய் கிணறுகள் அமைத்தல்,வீதிகள் புனரமைப்பு,சந்தை புனரமைப்பு, சுடலை வீதிகள் புனரமைப்பு உள்ளிட்ட இணைக்கப்பட்டு வரவு-செலவுத்திட்டம் சபைக்கு அறிவிக்கப்பட்டு சபையின் உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.(2-281)

# விளையாட்டு மைதானத்திற்கு பார்வையாளர் கட்டடம் திறப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் விளையாட்டு மைதானத்திற்கான பார்வையாளர்கள் கட்டடம் ஒன்று பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உறுப்பினர் கோ.அஞ்சலாவினால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் கே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பிரதி அதிபர் கு.சிவமலரும், கௌரவ விருந்தினராக ஆசிரியரும், பழைய மாணவனுமான சந்திரமோகன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கட்டடத்திற்கான நிதி உதவியை பிரான்சில் வசிப்பவரும், பாடசாலையின் பழைய மாணவனுமான சுப்பிரமணியம் சிவகுமாரன் இரண்டு இலட்சம் ரூபாய் நிதியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் தமக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை எனக் கோரி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள அவர்களது அலுவலக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். (2-315)



கிளிநொச்சி கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் திருமதி த.கனகசபை தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கட்டடத்தை திறந்து வைப்பதைபடத்தில்காணலாம். (படம்-பூநகரிசெய்தியாளர்)

# வவு.பழைய பேருந்து நிலையத்தை மீளவும் திறக்க நடவடிக்கை எடுங்கள்

## முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ஆளுநரிடம் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்குமாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் உத்தரவுக்கமைய வவுனியா நகரில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையம் கடந்த வருடம் இழுத்து மூடப்பட்டது. இதனால் அங்குள்ள 137 வியாபார நிலையங்கள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் கடந்த ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல் கூரேயை சந்தித்த வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மீண்டும் பழைய பேருந்து நிலையத்தை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி மீண்டும் ஆளுநருக்கு கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிபபிடத்தக்கது. (2-281)

# கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள்

## மடு பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்டது

(மன்னார்)

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவும் வகையில், லைகாவின் ஞானம் அறக்கட்டளை முன்னெடுக்கும் நிவாரண நடவடிக்கை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து நாட்களாக கொழும்பில் பொதியிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று, நிவாரணப் பொதிகள் தாங்கிய முதலாவது வாகன தொடரணி நேற்று முன்தினம் பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்கி வருகை தந்துள்ளது.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு என ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் மடு பிரதேசச் செயலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.






மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் தச்சணா மருதமடு, பாலம்பிட்டி ஆகிய கிராமங்களில் கஜா புயலினால் பாதிக்கப்பட்ட 80 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக நிவாரணப்பொருட்கள் வழங்கி வைக்கும் வகையில் ஆரம்ப நிகழ்வு மடு பிரதேசச் செயலகத்தில் மடு பிரதேசச் செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது மடு பிரதேசச் செயலக அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள் லைகாவின் ஞானம் அறக்கட்டளை நிவாரணக் குழுவினருடன் இணைந்து நிவாரணப்பொருட்களை வழங்கி வைத்தனர். (2)

# முல்லையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் மழையால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உதவிகள் தற்போது வழங்கப்படுகின்றன என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று முன்தினம் உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் மழையால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உதவிகள் தற்போது வழங்கப்படுகின்றன என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கில் அதிகளவானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தம் ஏற்படும் போது எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் மக்கள் ஈடுபடவேண்டும்.

தற்காலிக வீடுகளில் இருக்கின்ற மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நிதிவழங்கல் செயற்பாடும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிவாரண சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.



அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதிகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்கள் ஓரளவு மீளக்கூடும் என்று நம்பிக்கை கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார். (2-315)




# நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறந்துவைப்பு





(பனிக்கன்குளம்)

விசுவமடு மேற்கு இளைஞர் கழகத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டிற்கான **youth with talent** வேலைத்திட்டத்தின் கீழ் மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை அமைக்கப்பட்டு இதன் திறப்பு விழா கடந்த 28 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லை வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி உமா நிதி புவனராஜா திறன் வகுப்பறையை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து 2018 தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவித்து பரிசல்களும்வழங்கப்பட்டன.(2-281)

# கப்ரக வாகனம் தடம் புரண்டது

## மாடு உயிரிழந்தது



(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியின் கண்டாவளைப்பகுதியில் கப் ரக வாகனம் ஒன்று மாட்டுடன் மோதி தடம்புரண்டுள்ளதுடன் அதன் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

மாடொன்றும் வாகனத்தின் சில்லினுள் நசியுண்டு உயிரிழந்துள்ளது.

முல்லைத்தீவில் இருந்து மரக்கறிகளை ஏற்றிக் கொண்டு பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கப்ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டையிழந்த நிலையில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதி தடம் புரண்டுள்ளது.

இதன் போது வாகனத்தின் சாரதி தெய்வாதீனமாக உயிர்தப்பியதுடன் மாடு உயிரிழந்தது.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(2-315)

# நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுவதில் தாமதம்

## வவுனியா நகரசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

(பனிக்கன்குளம்)

வவுனியா நகரசபையில் உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் அனைத்தும் தீர்மானங்களாக முன்மொழியப்பட்டும் வழிமொழியப்பட்டும் வருகின்றனவே தவிர அதனை நிறைவேற்றுவதற்குரிய எவ்விதமான நடவடிக்கையும் இடம்பெறுவதில்லை. இவ்விடயத்தில் தலைவர் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நேற்று முன்தினம் இடம்பெற்ற 8ஆவது நகர சபை அமர்வின்போது அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நகர சபை உறுப்பினர் ஆர். எம். லரீப் தெரிவித்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் காட்டி வருகின்றனர். இவ்விடயத்தில் நகர சபை தலைவர் உடனடியாக தலையிட்டு அத்தீர்மானங்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சபையில் தெரிவித்துள்ளார்.

உதாரணமாக பள்ளிவாசல் முன்பாக அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையம், மடுவத்திற்கு சி.சி.ரி.கமரா பொருத்துவது போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் பெரும்பான்மையான தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்ட போதிலும் இன்றுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சபையில் அனுமதி பெறப்பட்டபோதிலும் பல விடயங்களில் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை என்று நகரசபை உறுப்பினர் ஆர். எம். லரீப் மேலும் தெரிவித்துள்ளார்.(2-281)

# கலாசாரப் பெருவிழா

(கிளிநொச்சி)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலகமும் காலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா-2018 எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரைச்சி காலாசார பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான த.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது "கரை எழில் - 07" நூல் வெளியிடப்படவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமலராசா ஆற்ற முதற்பிரதியை சண் பேர்னிசிற்றி உரிமையாளர் திருமதி. ஐ.சுலேகா வழங்கி வைப்பார்.

நூலின் ஆய்வுரையை கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து கவியரங்கம், சமூக நாடகம், நடன ஆற்றுகை, நலிவுற்ற கலைஞருக்கான உதவித் தொகை வழங்கல், கிராமிய இசை, சான்றிதழ் வழங்கல் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெற்று கலாசார உத்தியோகத்தரின் நன்றியுரையுடன் நிறைவு பெறும். (2)

# கொடுப்பனவு வழங்கல்

(வவுனியா)

வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் வவுனியா நகர சபையின் கௌரவ தலைவர் இ.கௌதமனின் நிதிபங்களிப்புடனும் வெளிச்சம் அறக் கட்டளையின் ஏற்பாட்டில் தரம் 11 மாணவர்களுக்கான மேலதிக கணித பாட வகுப்பு அப் பாடசாலையில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் இரண்டாவது மாத காலப்பகுதிக்கான கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாய் நேற்று முன்தினம் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரனினால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (2)

# மன்னாரில் மக்களின் கருத்தை அறியாது நிறைவேற்றப்பட்ட வரவு-செலவுத்திட்டம்

## நகரசபை உறுப்பினர் ஆதங்கம்

(மன்னார்)

மன்னார் நகர சபையில் நிறைவேற்றப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. குறித்த வரவு-செலவுத்திட்டத்தில் மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்து திருத்தங்கள் ஏற்படுத்தும் பட்சத்தில் அத்திருத்தம் மக்களின் சுட்டிக் காட்டுதலுக்கு மத்தியில் நிறைவேற்றப்படுமாக இருந்தால் வரவு-செலவுத்திட்டத்தின் திருத்தம் மக்களின் திருத்தமா? அல்லது சபையினுடைய திருத்தமா? என்பதனை தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என மன்னார் நகரசபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபையின் 9 ஆவது அமர்வு கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற போது 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சபையில் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையில் நிறைவேற்றப்பட்ட வரவு -செலத்திட்டம், சபையில் முன் மொழியப்பட்டு. நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் மன்னார் நகர மக்களின் பார்வைக்கு காட்சிப் படுத்தப்பட்டதன் பின்னரே சபையில் சமர்ப்பிக்கப்பட்டு. தீர மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால் கடந்த 21 ஆம் திகதி மன்னார் நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் பின் மாலையில் திடீர் என இடம்பெற்ற கூட்டத்தில் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் முன்மொழியப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் சபையில் முன்மொழியப்பட்டு, சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்ட மன்னார் நகர சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் தற்போது மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி.ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழமையான நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும்.

அனைத்து அங்கத்தவர்களும் மெய்யன்பர்களும் தவறாது வருகை தருமாறு அறங்காவலர் சபையினர் கேட்டுக் கொள்கின்றார்கள். (2)

# ஜனாதிபதியின் நிலைப்பாட்டை நான் அறிவேன் வெற்றுக் கதிரைகளுக்கு மத்தியில் விஜயதாஸ



(கொழும்பு)

பாராளுமன்றத்தின் சட்டவாக்க சபையின் சபாநாயகரும் நிறைவேற்றதிகாரத்தின் தலைவர் ஜனாதிபதியும் இணைந்து தற்போதைய பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்,

இதேவேளை, பெரும்பான்மைக்கு செவிசாய்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளாரென்பதை நான் அறிவேன்.

ஆகவே அதனை ஆக்கபூர்வமாக முன்னெடுத்து ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் காலை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது பிரதமர் அலுவலகத்துக்கு நிதி வழங்குவதைத் தடுக்கக் கோரும் பிரேரணையை முன்வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உரையாற்றினார்.

ஆனால் ஆளுங்கட்சி சார்பில் பாராளுமன்ற அமர்வு புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விசேட உரையொன்றை ஆற்றினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மூன்று தசாப்தகால போர் மீண்டும் ஏற்படக் கூடாது என்ற நிலைப்பாட்டுக்கு அமையவே தேசிய அரசாங்கத்தை உருவாக்கினோம்.

அந்த நோக்கம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, 19 ஆவது அரசியலமைப்பு ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று நிலைமை துரதிர்ஷ்டமாகியுள்ளது.

சட்டவாக்க சபையின் தீர்மானங்களை நிறைவேற்று அதிகாரம் நிராகரிப்பதும் நிறைவேற்றதிகாரத்தின் தீர்மானங்களை சட்டவாக்க சபை சவாலுக்குட்படுத்துவதுமாக தேசிய அரசியலில் ஜனநாயகம் செயலிழந்து போய்விட்டது.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்த தேர்தலொன்றை நடத்துவதற்கான தீர்மானத்தை சட்டவாக்க சபையும் நிறைவேற்றதிகாரமும் இணைந்தே முன்னெடுக்க வேண்டும்.

மாறாக நீதி மன்றம் ஜனநாயகத் தேர் தலைத் தீர்மானிப்பது என்னைப்பொறுத்தளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனிமேலும் காலதாமதம் ஏற்படுத்தாது பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக்கு செவிசாய்க்க வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாகும்.

எனவே பாராளுமன்றத்தின் சட்டவாக்க சபையின் சபாநாயகரும் நிறைவேற்றதிகாரத்தின் தலைவர் ஜனாதிபதியும் இணைந்து இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

பெரும்பான்மைக்கு செவிசாய்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளாரென்பதை நான் அறிவேன். ஆகவே அதனை ஆக்கபூர்வமாக முன்னெடுத்து ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவாக இருந்தாலும் சரி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாக இருந்தாலும் சரி தங்களுக்கு ஆதரவு வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் பிளவுகளையும் கட்டுப்படுத்த தவறிவிட்டனர் எனவும் விஜயதாஸ தெரிவித்தார். (இ-7)

# பொதுஜன பெரமுனவின் வேகத்தைக் குறைத்தோம்

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பயண வேகத்தை தம்மால் குறைக்க முடிந்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணியின் முக்கியஸ்தரான அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

"தாமரை மொட்டுக் கட்சி மிக வேகமாக வளர்ச்சியடைந்து வந்தது. அதே வேகத்தில் சென்றிருந்தால், முழு நாடும் பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும்.

தற்போது அந்தக் கட்சியின் வேகம் குறைந்துள்ளது. அப்படியில்லை என்றால், நாங்கள் சிதறிப் போயிருப்போம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் மகிந்த ராஜபக்ஷவையும் மத்தியஸ்த நிலைமைக்கு கொண்டு வந்ததன் மூலம் பொதுஜன பெரமுனவின் வேகத்தை குறைக்க முடிந்துள்ளது" என எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# பருத்தித்துறை - மருதங்கேணி வீதியூடான போக்குவரத்து தடைப்படும் நிலையில்

## ஒப்பந்தகாரர்கள் மீது மக்கள் குற்றச்சாட்டு




(கரணவாய்)

ஒப்பந்தகாரர்களின் பொறுப்பற்ற செயலால் பருத்தித்துறை-மருதங்கேணி வீதியூடான போக்குவரத்து தடைப்படும் சூழல் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-மருதங்கேணி வீதி அம்பன் தொடக்கம் மருதங்கேணி வரையான பகுதியின் புனரமைப்பு வேலைகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் பகுதி பகுதியாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வந்தன.

இதில் நாகர்கோவில் பகுதியில் உள்ள பாலம் ஒன்று இரண்டு வருடங்களாக அமைக்கப்படாது வெட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

வெட்டப்பட்ட பகுதியில் நீர் நிறைந்து காணப்படுவதுடன் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதையை மூடி கடல் நீரேரிப்பகுதியுடன் தொடர்புபடும் வகையில் காணப்படுகிறது.

பலத்த மழை பெய்யுமாயின் பாலப்பகுதி கடல் நீரேரிப்பகுதியுடன் தொடர்புபடும் நிலை காணப்படுகிறது.

அப்படி ஏற்படின் பருத்தித்துறை-மருதங்கேணி பகுதிக்கான போக்குவரத்து நாகர்கோவில் எல்லையுடன் தடைப்படும் அபாயம் உள்ளது.

ஒப்பந்தகாரர்களின் பொறுப்பற்ற செயலாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-60)

# பரீட்சை எழுதவுள்ள 13 கைதிகள்

(கொழும்பு)

இவ்வருடம் இடம்பெறவுள்ள கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு 13 சிறைக்கைதிகள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த 13 சிறைக் கைதிகளில் 12 பேர் வெலிக்கடை மற்றும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைகளில் அமைக்கப்படவுள்ள பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, மற்றுமொரு கைதி வட்டரக்க சிறைச்சாலைகளில் அமைக் கப்பட வுள்ள பரீட்சை நிலையத்தில் தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

இந்நிலையில் மாத்தறை, காலி மற்றும் தங்காலை ஆகிய பகுதிகளில் 560 க்கும் மேற்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களும் இம்முறை கல்விப் பொதுத்தர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற வுள்ளனர்.

இம்முறை கல்விப்பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 6 இலட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளதோடு, இவர்களில் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 850 பேர் பாடசாலை மூலம் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

பரீட்சைகளுக்காக நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 661 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களைக் கொள்ளையிட்ட நான்கு சந்தேகநபர்கள் கைது!

(கொழும்பு)

கொழும்பு -05 ஆர் . ஏ. டி மெல் மாவத்தையில் வர்த்தக நிலையமொன்றை உடைத்து 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட்டதாக நான்கு சந்தேநபர்கள் நேற்றுமுன்தினம் மாலைகைதுசெய்யப்பட்டனர்.

ராஜகிரிய , கடவத்தை மற்றும் அதுருகிரிய பிரதேசங்களைச் சேர்ந்த 35 முதல் 50 வயதுக்கிடைப்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து போதைப்பொருளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களால் திருடப்பட்ட 10 கணனிகளும் மற்றும் 12 தொலைபேசிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (இ-7)



யாழ்.நெடுந்தீவு வாழ் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டத்தினூடாக 26 பெண் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான கைப்பணி தொடர்பான பயிற்சி கடந்த 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிரட்டை மற்றும் முருகைக்கல் மூலம் கைவினைப்பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கிலும், உள்நாட்டில் பெண்களுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலும் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில் அரச நிதி ஒதுக்கீட்டில் நெடுந்தீவு துறைமுகத்திற்கு அண்மையில் சந்தைப்படுத்தும் கூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

# யாழ்.பல்கலையில் கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய முதலாவது பன்னாட்டு மாநாடு 7, 8 ஆம் திகதிகளில்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய முதலாவது பன்னாட்டு மா்நாடு (IRCCS 2018) எதிர்வரும் டிசெம்பர் மாதம் 07, 08 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

"புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை நோக்கி" என்ற மையக் கருத்தில் இடம்பெறவுள்ள இந்த மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் யாழ். திருமறைக்கலாமன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. குறித்த மாநாடு தொடர்பில் யாழ்.பல் கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஏற்பாட்டு குழுவினர் கருத்து தெரிவிக்கையில், இந்த ஆய்வு மாநாடானது இன்றைய உலகைத் தீராது ஆட்டிப் படைக்கும் பல பிரச்சினைகளுடன், ஏழ்மை, அநீதி, ஊழல், பூகோள மயமாதலின் தீய விளைவுகள், கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சூழல்சார் சவால்கள் உள்ளடங்கலான பிரச் சினைகளின் மத்தியிலும், ஒரு புதிய மனிதநேயப் பண்பாடு ஒன்றைக் கட்டியெழுப்பும் தமது மானுட மற்றும் சமூகப் பொறுப்புக்களைக் கிறிஸ்தவர்கள் மேலும் வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை முன்மொழிகிறது.

அவர்கள் தங்கள் உள்ளூர் சூழலில் மானுடவிழுமியங்களை அடித்தளமாக கொண்ட புதிய பண்பாடு ஒன்றைக் கட்டியெழுப்ப மேற்கொண்டுவரும் முயற்சிகளை விஞ்ஞான பூர்வமான அறிவியல்முறை சார் ஆய்வுகளினூடாக ஆவணப்படுத்துவதற்கான தளம் ஒன்றை வழங்குவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதிய மனிதநேயப் பண்பாட்டுக்கான பங்களிப்பை வழங்குவது இங்கு கிறிஸ்தவர்களின் ஒரு சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகவே கருதப்படுகிறது. இவ் வாய் வரங் கானது ஏனைய சமய நம்பிக்கையாளர்களையும் ஒன்றிணைத்து அனைவராலும் பகிரப்படும் மானுட விழுமியங்களை அடித்தளமாகக்கொண்ட ஒரு சிறந்த சமுதாயத்திற்காக குரல் கொடுப்பது மற்றும் உழைப்பது தொடர்பான விழிப்புணர்வையும் அதிகரிக்கும்.

மேலும் இவ்வாய்வரங்கு கிறிஸ்தவர்களும், ஏனைய சமய நம்பிக்கையாளர்களும் தமக்குப் பொதுவாக உள்ள சமூகப் பொறுப்பு சார்ந்த விடயங்களில் எவ்வாறு ஒன்றிணைந்து ஈடுபட்டு ஒரு புதிய மனிதநேயப் பண்பாட்டை உருவாக்க முடியும் என்பதற்கான வழிவகைகளையும் ஆராயும். இந்த ஆய்வு மாநாட்டின் நோக்கை அடித்தளமாக கொண்டு ஆய்வரங்கின் இலக்குகளாக, உள்ளூர் சூழலில் கிறிஸ்தவத்தின் வரலாற்றுக்கு மீளச்சென்று புதிய மனிதநேய பண்பாட்டை உருவாக்குவதற்கான அதன் பங்களிப்பையும் செல்வாக்கையும் உசாவி சிறப்பாக கட்டமைக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமான ஆய்வுக்கட்டுரைகளாக ஆவணப்படுத்துதல் காலனித்துவ சக்திகளிடமிருந்தும் பூகோளமயமாதலின் பின் நவீனத்துவ போக்குகளின் பிடியிலிருந்தும் உள்ளூர் கலை, இலக்கியம், பண்பாடு, கட்டடக்கலை போன்றவற்றின் விழுமியங்களைப் பாதுகாப்பதில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பை சீர்தூக்குதல் ஒவ்வொரு மனிதனும் கடவுளின் பிள்ளை என்ற வகையில் தனி மனிதனின் மாண்பையும் மேன்மையையும் பாதுகாப்பதன் வழியாக பாகுபாடற்ற, ஒடுக்கு முறையற்ற புதிய மனிதப்பண்பாட்டிற்குப் பங்களிப்பு செய்தல் பால்நிலை, சாதி, அரசியல் அடக்கு முறை, மனித உரிமை மீறல் போன்ற விடயங்களை எதிர்கொள்ளவும் பெண்கள், சிறுவர்கள், மாற்றுத்திறனாளிகள், ஒடுக்கப்பட்டோர், விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டோர் போன்றவர்களின் சுதந்திரம், சமத்துவம், மாண்பு என்பவற்றை எதிர்கொள்ள நவீன கிறிஸ்தவத்தின் இறையியல் பங்களிப்பு உருவாக்கியிருக்கும் செழிப்புமிக்க கருத்தியல் வளங்களை தரவாய்வு செய்தல் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் அடித்தளமிட்டு அண்மைக்கால கிறிஸ்தவ இறையியல் செய்துள்ள பங்களிப்புக்களை விரிவாக்கம் செய்வதும் பன்மைத்தன்மை, சமயங்களுக்கிடையிலான சகவாழ்வு, பல்சமய உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு போன்ற எண்ணக்கருக்களை மீளக்கண்டுபிடித்து புதிய வழியில் அவற்றை உறுதி செய்தல்..

ஆய்வாளர்கள், அறிஞர்கள், வளவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஒரு தளத்தில் சந்தித்து கிறிஸ்தவ சிந்தனையின் புதிய போக்குகள் பற்றிய தமது தெளிவுகளை பகிர்ந்துகொள்ள உதவுவது போன்றவையாகும். இவ்வாய்வு மாநாடானது மீண்டுமொரு முறை சமகால சமுதாயம் மனித விழுமியங்களில் கட்டியமைக்கப்பட வேண்டிய தேவையை வலியுறுத்துவதில் கவனம் செலுத்த விழைகிறது. கோளமயமான இன்றைய உலகின் தனிநபர்வாத, நுகர்வுவாத, நடைமுறைவாத போக்குகளின் மத்தியில் ஒவ்வொரு தனிநபரதும் மாண்பையும் பெறுமதியையும் பாதுகாத்து புதியதொரு சமுதாயத்தை முன்னெடுப்பதற்கு இத்தகைய வலியுறுத்தல் அவசியமானதாக இருக்கிறது. இந்த ஆய்வு மாநாட்டின் மையப்பொருள் சமகால மானுடம் கொள்ள வேண்டிய அக்கறைகளின் மேலும் பல பகுதிகளுக்குள்ளும் நுழைகிறது. மனித விழுமியங்களிலிருந்து விலகுவதானது இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் செயற்பாடுகளையும் மனித வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களையும் பாதிக்கிறது. குடும்பவாழ்வு, சமூக வாழ்வு, பண்பாட்டு விழுமி யங்கள், பால்நிலை பார்வைகள், சமய நம்பிக்கைகள், கல்வி முறைமைகள் எல்லாவற்றுக்கும் மேலாக மனித வரலாற்றின் போக்குகள் ஆகிய எல்லாவற்றை யும் பாதிக்கின்றது.

ஆய்வு மாநாட்டின் மையப்பொருள் மட்டிலான ஆய்வுகளை ஊக்கப்படுத்துவது அறிவார்ந்த மட்டத்தில் சமகால உலகில் புதிய மனிதநேயப் பண்பாட்டின் தேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு அறிவுசார் செயற்பாடாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களிடமிருந்து கிறிஸ்தவக் கற்கைகள் தொடர்பான 87 ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு 40 ஆய்வுக்கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை 8 ஆம் திகதி ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (இ-9)

## விடைத்தாள் திருத்தும் பணி

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலனசபையால் நடத்தப்பட்ட சைவநெறி, தமிழ்மொழி பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி வழமைபோன்று சபை மண்டபத்தில் குழு முறையில் நாளை மறுதினம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆசிரியர்கள் அன்றைய தினம் சைவ பரிபாலன சபைக்கு (கல்லூரி வீதி, நீராவியடி) சமுகமளிக்கும்படி அதன் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)








யாழ்.மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயப்பங்குத் தந்தை அருட்பணியாளர் எக்ஸ். டபிள்யூ ஜேம்ஸ்சும் கௌரவ விருந்தினர்களாக பிரபல வர்த்தகர்களான பொ.பற்குணசீலன், இ.தெய்வேந்திரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் இசைத் துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ.தர்ஷனன், தென்மராட்சி கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
(படங்கள்:-விஜயவாசன், சுபேசன்)








யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் ஒளிவிழா பாடசாலை கிறிஸ்தவ மன்றத்தலைவர் தலைமையில் இடம்பெற்றது. ஒளிவிழா திருப்பலிப் பூஜையை கட்டைக்காட்டு பங்குத்தந்தை வணபிதா மைக் றெனால்ட் அடிகளார் நிகழ்த்தினார். தொடர்ந்து கிறிஸ்தவ மன்றத்தினரால் ஒளிவிழா தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.
(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

# பாரதம்

## சவுதி இளவரசர் முகம்மது பின் சல்மானுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு

ஆர்ஜென்டீனா சென்றுள்ள பிரதமர் மோடி, சவுதி அரேபிய இளவரசர் முகம்மது பின் சல்மானை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்தார்.



ஜி-20 நாடுகளின் 13 ஆவது உச்சி மாநாடு ஆர்ஜென்டீனா நாட்டின் தலைநகர் புய்னோஸ் எய்ரேஸ் நகரில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்க ஆர்ஜென்டீனா சென்றுள்ள பிரதமர் மோடி, மாநாட்டுக்கு இடையே சவுதி அரேபிய இளவரசர் முகம்மது பின் சல்மானை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இருநாட்டு பொருளாதார உறவை மேலும் ஊக்கப்படுத்துதல், கலாசாரம் மற்றும் எரிசக்தித்துறையில் உறவை வலுப்படுத்துவது ஆகியவை குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

தொழில்நுட்பத்தில் முதலீடுகளை அதிகப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உணவு பாதுகாப்பு போன்ற துறைகளில் முதலீடுகளை அதிகப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

இந்தச் சந்திப்பு குறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"இளவரசர் முகம்மது பின் சல்மானுடன் நடைபெற்ற சந்திப்பு பயனுள்ள வகையில் இருந்தது. இந்தியா - சவுதி அரேபிய இடையேயான உறவுகள் மற்றும் பொருளாதாரத்தை மேலும் ஊக்கப்படுத்துதல் கலாசாரம் மற்றும் எரிசக்தித்துறை ஊக்கப்படுத்துதல் ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தினோம்" என்று தெரிவித்துள்ளார். (4-7)

## டில்லியில் விவசாயிகள் தொடர் போராட்டம்





(டில்லி)

நாடு முழுவதிலும் இருந்து டில்லியில் திரண்டுள்ள விவசாயிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாய கடன்களை இரத்துச் செய்ய வேண்டும், விவசாய விளை பொருட்களுக்கு நியாயமான விலை வழங்க வேண்டும், 60 வயது விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய விவசாயிகளின் ஒருங்கிணைப்பு குழு டில்லியில் நேற்று முன்தினம் முதல் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்தப் போராட்டக் குழுவில் திருச்சியை சேர்ந்த தேசிய தென்னிந்திய விவசாயிகள் சங்கத்தலைவர் அய்யாக்கண்ணு தலைமையிலான 1,300 பேர் தமிழகத்தில் இருந்து பங்கேற்றுள்ளனர்.

அதேபோன்று உத்தரப் பிரதேசம், பீகார், இமாச்சல பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் உள்ளிட்ட 29 மாநில விவசாயிகளும், 4 யூனியன் பிரதேசத்தை சேர்ந்த 207 விவசாய சங்கத்தை சேர்ந்த விவசாயிகளும் என மொத்தம் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இவர்கள் டில்லியில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர், பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இந்த நிலையில் மத்திய அரசு எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர்.

இதற்காக தமிழக விவசாயிகள் 25 பெண்கள் உட்பட 1,300 பேரும் டில்லி ராம்லீலா மைதானத்தில் நேற்று காலை 8 மணி முதல் திரண்டனர். அதேபோன்று அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் யோகேந்திர யாதவ், தலைமையிலும் மற்ற விவசாய சங்கங்களை சேர்ந்த விவசாயிகள் என இலட்சக் கணக்கான விவசாயிகள் திரண்டிருந்தனர்.

எங்கு பார்த்தாலும் பச்சை துண்டுகளுடன் விவசாயிகள் தலைகளாக காணப்பட்டன. இதில் தமிழக விவசாயிகள் 10 மணிக்குள் மத்திய அரசு வந்து கோரிக்கை குறித்து, உறுதி கூறி, நிறைவேற்ற வாக்குறுதி தராவிட்டால் பேரணியில் முழு நிர்வாணமாக செல்வோம் என அறிவித்திருந்ததால் பரபரப்பாக இருந்தது. பேரணி இடத்தில் ஆயிரக்கணக்கான டில்லி பொலிஸார் மற்றும் மத்திய இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு டில்லி ஆம் ஆத்மி எம். எல்.ஏக்கள் ஆதரவு தெரிவித்ததோடு, அவர்கள் நேரடியாக வந்து உணவு வழங்கினர். (4-7)

## ஜி-20 மாநாட்டுக்கு சென்ற ஜேர்மன் பிரதமர் மெர்க்கெலின் விமானத்தில் கோளாறு

### அவசர தரையிறக்கம்

(பெர்லின்)

அயர்லாந்து நாட்டில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் சென்ற விமானத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறினால் அவரது முதல் நாள் நிகழ்ச்சி இரத்தாகியுள்ளது.

ஜி-20 என்று சுருக்கமாக அழைக்கப்படும் அமைப்பானது உலகில் வளர்ச்சி



அடைந்த 20 நாடுகளான ஆர்ஜென்டீனா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இந்த அமைப்பின் சார்பில் ஆண்டுதோறும் உச்சி மாநாடுகள் நடைபெற்று வருகிறது. அவ்வகையில், இந்த ஆண்டுக்கான 13 ஆவது உச்சி மாநாடு ஆர்ஜென்டீனா நாட்டின் தலைநகர் புய்னோஸ் எய்ரேஸ் நகரில் நேற்று 30 ஆம் திகதி தொடங்கி டிசெம்பர் முதலாம் திகதி வரை நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் பெர்லின் நகரில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றார். அவருடன் அர[…] உயரதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்க[…] குழுவும் சென்றது.

நெதர்லாந்து நாட்டின்மீது நடு வானி[…] பறக்கும்போது மின்சார சாதனங்கள் சரியா[…] இயங்காததால் விமானத்தை தொடர்ந்[…] இயக்க இயலாது என்று விமானி தீர்ம[…]னித்தார்.

இதைத்தொடர்ந்து, அங்கிருந்து ஜேர்மன[…] நாட்டுக்கு திரும்பிய விமானம் ரினே[…] வெஸ்ட்பாலியா மாநிலத்தில் உள்ள கோல்[…] நகரில் அவசரமாக தரையிறங்கியது.

இதனால், ஜி-20 மாநாட்டின் முதல்நா[…] கூட்டத்தில் ஏஞ்சலா மெர்க்கல் பங்கேற[…] முடியாமல் போனது. (4-7)

## வெள்ளை மா[…]



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, [...] ட்ரம்ப் தம்பதியர் திறந்து வைத்தனர். அந்[...] ஜனாதிபதியின் சார்பில் பிரமாண்டமான கி[...] வண்ண ஒளி விளக்குகள் நிறைந்த பிரம[...] டொனால்ட் ட்ரம்ப்பும், அவரது மனைவி மெ[...] கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் தெரிவித்தி[...]

## அமெ.ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையீடு

# நாடாளுமன்ற உறுப்பினர்களை தவறாக வழி நடத்தியதாக முன்னாள் சட்டத்தரணி ஒப்புதல்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா தலையிட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நாடாளுமன்ற விசாரணையில், தாம் பொய் கூறியதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முன்னாள் சட்டத்தரணி மைக்கேல் கோஹன் ஒப்புக்கொண்டுள்ளார்.

மொஸ்கோவில் உள்ள ட்ரம்பின் ரியல் எஸ்டேட் திட்டம் ஒன்று குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களை தவறாக வழிநடத்தியதாக அவர் ஒப்புக்கொண்டார்.

மான்ஹாட்டனிலுள்ள ஃபெடரல் நீதிமன்றம் ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை எதிர்பாராத வகையில் ஆஜரான கோஹன் நாடாளுமன்றத்தில் பொய் பேசியதன் மூலம் தாம் குற்றமிழைத்ததாக ஒப்புக்கொண்டார்.

அமெரிக்கத் தேர்தலில் ரஷ்யா தலையிட்டு ட்ரம்புக்கு ஆதரவாக செயற்பட்டதாக தெரிவிக்கப்படும் விவகாரத்தில் ட்ரம்போ, அவரது உள்வட்டாரமோ ரஷ்யாவுடன் இரகசியமாக சேர்ந்து செயல்பட்டார்களா என்பது பற்றி அமெரிக்க நீதித்துறையின் சிறப்பு சட்டத்தரணி நடத்தி வரும் விசாரணையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கோஹன் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (4-7)



## சவுதி கூட்டண[…] நிறுத்த அமெரிக[…]

உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனையை மீறி ஏமனில் சவுதி தலைமையிலான கூட்டணிக்கான அமெரிக்காவின் ஆதரவை குறைக்கும் நடவடிக்கைக்கு அமெரிக்க செனட் சபையில் ஆதரவளிக்கப்பட்டுள்ளது.



இதன்மூலம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு செனட் உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

சவுதிக்கான அமெரிக்காவின் ஆதரவை குறைப்பது ஏமனின் நிலைமையை

மேலும் மோச[…] ரிக்க இராஜாங்[…] மற்றும் பாதுக[…] ஆகியோர் வ[…]

ஆனால், [...] ஜமால் கஷோ[…] ட்ரம்பின் செய[…] விரக்தியடைந்[…]

# வெளிநாடு



...ன்ற
...லின்
...று

...டன் அரசு
...பாளர்கள்


... வானில்
... சரியாக
...தாடர்ந்து
...ரி தீர்மா

...ஜேர்மனி
... ரினே-
... கோல்ன்
...
...தல்நாள்



...ங்கேற்க
(4-7)

## பேருந்துடன் கார் மோதி விபத்து 5 பேர் உயிரிழப்பு; 32 பேர் காயம்



கொங்கொங்கில்பேருந்துடன் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 5 பேர் பலியாகினர். 32 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து கொங்கொங் பொலிஸார் தரப்பில், "கொங் கொங் விமான நிலையத்துக்குச் செல்லும் பாதையில் பயணிகளுடன் வந்த பேருந்துடன் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தின் ஜன்னலிடலிருந்து பயணிகள் தூக்கி வீசப்பட்டனர். இந்த விபத்தில் 5 பேர பலியாகினர்.

32 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சவுத் சீனா மார்னிங் போச் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விபத்து குறித்து பயணி ஒருவர் கூறும் போது.

"திடீரென பேருந்து மீது கார் மோதியது. நான் தரையில் விழுந்தேன். பேருந்தில் இருந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டோம்" என்று தெரிவித்தார். கொங்கொங்கில் அண்மையில் ஏற்பட்ட பெரும் விபத்து என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

## ரஷ்யா–உக்ரேய்ன் மோதல் போக்கு

## ஜனாதிபதி புடினுடனான சந்திப்பை ரத்துச் செய்த அமெரிக்க ஜனாதிபதி



(பியூனஸ் அயர்ஸ்)

உக்ரேய்ன் நாட்டு கப்பல்கள் சிறைபிடிப்பு பிரச்சினையை மையப்படுத்தி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உடனான சந்திப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரத்து செய்தார்.

உக்ரேய்னின் கிரிமியா பகுதியை கடந்த 2014இல் ரஷ்யா தன்னுடன் இணைத்ததில் இருந்து இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அண்மையில் கிரிமியா அருகே உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தி கைப்பற்றியதில் இருந்து மீண்டும் போர் பதற்றம் உருவாகியுள்ளது.

உக்ரேய்ன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. மேலும் உக்ரேய்ன் நாட்டுக்கு அதிக ஆதரவு அளிக்கும்படி ஐரோப்பிய நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், ஆர்ஜென்டீனாவில் நடைபெறும் ஜி-20 மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடினை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சந்திப்பது உறுதி என ரஷ்ய ஜனாதிபதியின் கிரெம்ளின் மாளிகை அறிவித்திருந்தது. வோஷிங்டனில் இருந்து ஆர்ஜென்டீனாவுக்கு புறப்படும்போது ட்ரம்மும் நேற்று முன்தினம் இதை உறுதிப்படுத்தி இருந்தார்.

ஆனால், ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தற்போது இரத்து செய்து விட்டார்.

ரஷ்யாவால் சிறைபிடிக்கப்பட்ட கப்பல்களும், மாலுமிகளும் இன்னும் உக்ரேய்னுக்கு திரும்பிவராத நிலையில் புடினுடனான சந்திப்பை இரத்து செய்ய தீர்மானித்துள்ளேன்.

இந்தப் பிரச்சினை தீர்ந்த பின்னர் கூடிய விரைவில் அர்த்தமுள்ள ஒரு சந்திப்பை நான் எதிர்பார்க்கிறேன் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (4-7)

## அவுஸ்திரேலியாவில் பரவும் காட்டுத் தீ! ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு மாநிலமான குயின்ஸ்லாந்தில் கடந்த 24 ஆம் திகதி உருவான காட்டுத் தீ அங்கு நிலவி வரும் வறண்ட வானிலை மற்றும் வேகமாக வீசி வரும் காற்றால் கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.



அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு மாநிலமான குயின்ஸ்லாந்தில் கடந்த 24 ஆம் திகதி பயங்கர காட்டுத் தீ உருவானது. தொடர்ந்து பரவி வரும் இந்த தீயால் 22 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான நிலப்பரப்பு நாசமாகி உள்ளது.

அங்கு நிலவி வரும் வறண்ட வானிலை மற்றும் வேகமாக வீசி வரும் காற்றால் இந்தக் காட்டுத்தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

இதனால் அந்தப் பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். மேலும் காட்டுத்தீ பரவி வரும் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிகுந்த உஷார் நிலையில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காட்டுத்தீயை அணைக்க நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

ஆனால் அங்கு நிலவி வரும் மோசமான வானிலையால் இந்தப் பணிகள் மிகவும் மந்தமாகவே நடைபெற்று வருவதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (4-7)

## ...ளிகையில் கிறிஸ்மஸ் மரம்



...னிட்டு, அமெரிக்காவில் ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மரத்தை ஜனாதிபதி ...னர். அந்நாட்டு மரபுப்படி கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடும் விதமாக, வெள்ளை மாளிகையில் ...மான கிறிஸ்மஸ் மரம் நிறுவப்படும். இதன் அடிப்படையில், 96 ஆம் ஆண்டாக இந்த ஆண்டு பச்சை ...ந்த பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கிறிஸ்மஸ் மரத்தை ஜனாதிபதி ...னவி மெலனியா ட்ரம்மும் ஒன்றாக திறந்து வைத்தனர். இதன் பின்னர் ஜனாதிபதி ட்ரம்ப் மக்களுக்கு ...ரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...டணிக்கான ஆதரவை ...ரிக்க செனட் நடவடிக்கை



...ம் மோசமடையச் செய்யும் என அமெ...ராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ ...ம் பாதுகாப்புச் செயலாளர் ஜிம் மட்டிஸ் ...யார் வலியுறுத்தியிருந்தனர்.

...னால், சவுதி அரேபிய ஊடகவியலாளர் ... கஷோக்கியின் கொலை தொடர்பான ...ன் செயற்பாட்டில் செனட் உறுப்பினர்கள் ...யடைந்துள்ள நிலையிலேயே இவ்வாறு வாக்களிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணைக்கு 63 பேர் ஆதரவாகவும் 37 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

சுயாதீன செனட் உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான பெர்னி சாண்டர்ஸ், குடியரசுக்கட்சி செனட் உறுப்பினர் மைக் லீ மற்றும் ஜனநாயக கட்சியின் செனட் உறுப்பினர் கிறிஸ் மர்ஃபி ஆகியோரினால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## 17 வயது சிறுவன் கொலை வழக்கு தொடர்பாக 3 பொலிஸாருக்கு தலா 40 ஆண்டுகள் சிறை

(மணிலா)

17 வயது சிறுவனை சுட்டுக்கொன்ற வழக்கில் பொலிஸார் 3 பேருக்கு தலா 40 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து பிலிப்பைன்ஸ் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆசிய நாடுகளில் ஒன்றான பிலிப்பைன்சில் பிற நாடுகளை காட்டிலும் அதிக அளவில் போதைப்பொருள் புழங்குகிறது.

எனவே போதைப்பொருளை கட்டுப்படுத்தும் விவகாரத்தில் ஜனாதிபதி ரோட்ரிகோ துதர்தே கடுமையான போக்கைக் கையாண்டு வருகிறார்.

அந்த வகையில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் என சந்தேகிக்கும் நபர்களை பார்த்த இடத்தில் சுட்டுக்கொல்லும் அதிகாரத்தை பொலிஸாருக்கு அவர் வழங்கியுள்ளார். அதன் படி 2016 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை சுமார் 5000 பேர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டு இருக்கின்றனர்.

ஆனால் இது முற்றிலும் மனித நேயமற்ற செயல் என்றும் அப்பாவி மக்கள் மீது தொடுக்கப்படும் போர் என்றும் மனித உரிமை அமைப்புகள் சாடின. ஜனாதிபதி ரோட்ரிகோ துதர்தே மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

இதற்கிடையில், கடந்த 2017 ஆம் ஆண்டு போதைப் பொருள் விவகாரத்தில் கியான் டெலோஸ் சாண்டோஸ் என்கிற 17 வயது சிறுவனை பொலிஸார் சுட்டுக்கொன்றனர். இது அங்கு பெரிய அளவிலான போராட்டத்துக்கு வித்திட்டது.

அதன் எதிரொலியாக சிறுவனை சுட்டுக்கொன்ற 3 பொலிஸார் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணையில் 3 பேரின் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டது.

இதையடுத்து, குற்றவாளிகள் 3 பேருக்கும் தலா 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி நேற்று முன்தினம் தீர்ப்பு அளித்தார். (4-7)

## 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு

# அட்மிரல் ரவீந்திரவை வெலிக்கடை சிறையில் பார்வையிட்டார் மகிந்த

(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சந்தித்து நலன் விசாரித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச்சென்று அவரைப் பார்வையிட்டுள்ளார்.



இதனை மகிந்த ராஜபக்ஷவின் ஊடகச் செயலர் றொகான் வெலிவிட்ட உறுதிப்படுத்தியுள்ளார்.

வெலிக்கடைச் சிறையில், அட்மிரல் விஜேகுணரத்னவைப் பார்வையிடச் சென்ற மகிந்த ராஜபக்ஷ, தண்டனைக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மற்றும் பொதுபல சேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகியோரையும் சந்தித்துள்ளார் என்றும் றொகான் வெலிவிட்ட தெரிவித்தார். (இ-7)

# "PMB Rice" முதலாவது பொதி ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையின் **"PMB Rice"** விற்பனை நாமத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள அரிசி சந்தைப்படுத்தலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் முகமாக அதன் முதல் பொதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதுடன், அப்பணிகள் நாடளாவிய ரீதியில் 19 மாவட்டங்களிலுள்ள 220 களஞ்சியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லினை தரமான அரிசியாக மாற்றி அதனை நாடளாவிய ரீதியில் நுகர்வோருக்கு வழங்குவதற்காக ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீரவின் வழிகாட்டலின் கீழ் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் அரிசி சந்தைப்படுத்தப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதுடன், "நூறு வீத தேசிய உற்பத்தி" என்ற தொனிப்பொருளின் கீழ் சந்தைப்படுத்தப்படும் இந்த அரிசி உற்பத்தி சந்தையில் அரிசி விலையினை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவும் அமைகின்றது.

மேலும் இதனூடாக நுகர்வோருக்கு குறைந்த



விலையில் சிறந்த அரிசியைப் பெற்றுக் கொள்ளவும் விவசாயிகளுக்கு தமது நெல்லுக்கான நியாயமான விலையைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் அமைகின்றது.

எதிர்காலத்தில் விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் நலன்புரி சங்கங்களினூடாக நுகர்வோருக்கு **"PMB Rice"** அரிசியை விநியோகிக்க எதிர்பார்க்கப்படுவதுடன், நாட்டின் அரிசி தேவைக்கமைய நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை சந்தைப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, விவசாயத்துறை அமைச்சு மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# சிங்களமொழி பேசுபவர்களுக்கு யாழில் பாதிப்பு ஏற்படக்கூடாது

## ஜனநாயகம் பற்றி தேசப்பிரிய விளக்கம்



(கொழும்பு)

சிறுபான்மை தரப்பினருக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானங்களை எடுப்பதே உண்மையான ஜனநாயகம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழில் தமிழ் மொழி பேசும் மக்கள் பெரும்பான்மையை கொண்டிருப்பதால் அங்கு சிங்கள மொழி பேசுபவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது.

அதேபோன்று அம்பாந்தோட்டையில் சிங்களம் பேசுவர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# டீ.ஏ.ராஜபக்ஷவின் ஞாபகார்த்த நிகழ்வு



(கொழும்பு)

டீ.ஏ.ராஜபக்ஷவின் ஞாபகார்த்த நிகழ்வு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அவரின் உருவச்சிலைக்கு இ.தொ.க. தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலர் மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் பங்குபற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அவரின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, அமைச்சர்களான நிமால்சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்த்தன, சமல் ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சொந்தம்

'இந்த வீடு எனக்குச் சொந்தம்' என்று சொல்லுகிறோம். அதற்காக நாம் போகும் இடமெல்லாம் அந்த வீட்டையும் தோளில் தூக்கி வைத்துக்கொண்டா போகிறோம்? அது முடியாத காரியம். நாம் 'சொந்தம்' என்று நினைக்கிற பல விடயங்கள் நமக்குச் சொந்தம் இல்லை சேர்!

எட்டு இலட்சம் ரூபாய் செலவு செய்து வீடு கட்டியிருப்பீர்கள்... பணம் உங்களுடையது என்பதற்காக அதில் பல்லியும் எட்டுக்கால் பூச்சியும் வாழாமலா போகிறது? அது எல்லாம் அந்த வீடு தன்னுடையது என்று நினைத்துக் கொண்டிருக்கும்!

'இவர் பத்து இலட்சம் ரூபாய் சொத்துக்கு அதிபதி!' என்று சொன்னார் ஒருத்தர். சொத்து எங்கே என்று கேட்டார்...

"நீதிமன்ற வழக்கில் இருக்கு! ஜெயித்து வர வேண்டும்!" என்கிறார்! 'எது சொந்தம்?' இதுதான் கேள்வி! இந்தக் கேள்விக்கு ஞானிகள் என்ன பதில் சொல்கிறார்கள்? அதை இப்போது பார்க்கலாம்!

ஒரு முனிவர் இருந்தார். முற்றும் துறந்த முனிவர்! பற்றே இல்லாத பரமஞானி அவர். இன்றைக்கு ஒரு ஊரில் இருப்பார். நாளைக்கு ஒரு ஊரில் இருப்பார். ஒரு வேளைதான் சாப்பிடுவார். அதுவும் உப்பில்லாத சாப்பாடு. பொய் சொன்னால் அவருக்குப் பிடிக்காது! பொய் சொல்லுகிறவர்கள் வீட்டில் சாப்பிடவே மாட்டார்!

ஒரு நாள் அவர் ஒரு ஊருக்குப்போனார். இந்த ஊரில் 'உண்மையானவர் யார்' என்று கேட்டார். 'அதோ ஒரு மாடி வீடு தெரிகிறது அல்லவா! அந்த வீட்டில் ஒரு பண்ணையார் இருக்கிறார். அவர் ரொம்பவும் உண்மையானவர். நேர்மையானவர். அடியார்கள் மேல் பக்தி கொண்டவர். ஒரு இலட்சம் செல்வம் உள்ளவர். நான்கு பிள்ளைகள் அவருக்கு!' என்று பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள்! உடனே இந்த முனிவர் அந்த பண்ணையார் வீட்டுக்கு போனார். இதைப் பார்த்தவுடனே இருந்தப் பண்ணையார் உடனே எழுந்து ஓடிவந்து முனிவர் காலில் விழுந்தார். சாப்பிடவேண்டும் என்றார்! அவருடைய அன்பு, அடக்கம், பணிவு இது எல்லாம் முனிவருக்குப் பிடித்துப் போச்சு! இருந்தாலும் 'அவர் உண்மையானவர்தானா' என்பதைச் சோதித்துப் பார்த்துக்கொண்டு தான் அவர் வீட்டில் சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார் முனிவர்! 'ஐயா! உங்களுக்குச் செல்வம் எவ்வளவு உண்டு" என்றார். "சுவாமி! என்னிடம் 22 ஆயிரம் ரூபாய் உண்டு" என்றார். "குழந்தைகள் எத்தனை பேர்" என்று கேட்டார். "சுவாமி! எனக்கு ஒரே மகன் தான்" என்றார். "உமக்கு வயது என்ன?" என்று கேட்டார். "சுவாமி! என்னுடைய வயது மூன்று வருடம் ஐந்து மாதம் ஏழுநாள் பதினாறு அரை மணி!" என்றார்.

முனிவருக்குக் கோபம் வந்து விட்டது! "நீர் சொல்வது முழுவதும் பொய்யாக இருக்கிறது! உமது வீட்டில் சாப்பிட்டால் என்னுடைய தவமே அழிந்துவிடும்!" என்று சொல்லிப் புறப்பட்டார்.

பண்ணையார் பதறிப்போய் அவர் காலில் விழுந்தார். "சுவாமி! எனக்கு பொய் சொல்லத் தெரியாது. நான் சொல்வது எல்லாம் உண்மைதான்" என்றார். வரவு–செலவுப் புத்தகத்தை எடுத்துக் காட்டினார். அதில் இருப்புத் தொகை ஒரு இலட்சம் ரூபாய் என்று இருந்தது.

"22 ஆயிரம் என்று பொய் சொன்னியே!" என்றார் முனிவர். "சுவாமி! ஒரு இலட்சம் ரூபாய் பெட்டியில் இருக்கிறது! இதோ பாருங்க... 22 ஆயிரம் ரூபாய் தர்மம் செய்து இருக்கிறேன். தர்மம் செய்த பணம் தானே என்னுடையது! பெட்டியிலே இருக்கிறது எப்படி எனக்குச் சொந்தம் ஆகும்?" என்றார்.

முனிவருக்கு ஆச்சரியம்! சரி! உமக்கு நாலு பிள்ளைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்" என்றார். "எனக்குப் பிறந்த பிள்ளைகள் நான்கு பேர் தான்! ஆனால் என் பிள்ளை ஒருத்தன் தான் !" என்றார்.

'அது எப்படி' என்றார் முனிவர்.

'மகனே நடராஜா' என்று கூப்பிட்டார் பண்ணையார். "சீட்டு விளையாடிக்கொண்டிருக்கிறேன்! வரமுடியாது" என்றான் நடராஜன். "மகனே வேல்சாமி!" என்று கூப்பிட்டார். "ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறாய் பேசாமல் இரு" என்றான்.

வேல்சாமி! "மகனே சிவசாமி!" என்று கூப்பிட்டார். "உனக்குப் புத்தி இருக்கா! ஏன் இப்படி அலருகிறாய்! இந்தப் பூமிக்குச் சுமையாக இன்னும் ஏன் இருக்கிறாய்!" என்றான் சிவசாமி! "மகனே கந்தசாமி" என்று கூப்பிட்டார் பண்ணையார்!

கந்தசாமி உடனே ஓடிவந்து கைகட்டி நின்றான். "என்னப்பா வேணும்?" என்று கேட்டான்! "சுவாமி! இவன் ஒருத்தன் தான் என் பிள்ளை!" என்றார். 'சரி! வயசு விடயம் எப்படி' என்றார் முனிவர்.

"சுவாமி நான் ஒரு நாளைக்கு 1 1/2 மணி நேரம் தான் வழிபாடு செய்கிறேன்! மற்ற நேரம் எல்லாம் இந்த உடம்பிற்காக உழைக்கிறேன்.

அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது வருடம் ஆகின்றது. ஆனாலும் 5 வயசிலிருந்து வழிபாடு செய்த நேரம் தான் எனக்குச் சொந்தம். அதைக் கூட்டித் தான் வயசாகச் சொன்னேன்!" என்றார்.

முனிவர் ரொம்பவும் சந்தோசப்பட்டு அவர் வீட்டில் சாப்பிட்டுப் போனாராம். இது பெரியவர் ஒருத்தர் சொன்னது. இதிலேயிருந்து எது 'நமக்குச் சொந்தம்' என்று விளங்குது இல்லையா?

இந்தத் தகவலை உங்களிடம் சொல்வதற்கு முன்னால் என் சிநேகிதர் ஒருத்தரிடம் சொன்னேன். அவருக்கு வயது 50 இருக்கும். சொல்லிவிட்டு "இப்போது சொல்லுங்கள்! உங்கள் வயது என்ன?" என்றேன். அதற்கு அவர்... "இப்பத்தான்நான்பிறந்திருக்கிறேன்!" என்றார்.

# இலங்கையை 2020 ஆம் ஆண்டு கண்ணிவெடியற்ற நாடாகப் பிரகடனப்படுத்தும் வேலைத்திட்டம் அமுல்

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவிப்பு

(கொழும்பு)

30 வருடகால யுத்தத்தின் போது யுத்தத்தில் ஈடுபட்ட அனைத்து தரப்பினரும் வடக்கு- கிழக்கு மாவட்டங்களில் கண்ணிவெடிகளை யுத்த உபாயமாக புதைத்திருந்தனர்.

2009 ஆம் ஆண்டுயுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் மீள்குடியேற்ற செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காகவும் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் கண்ணிவெடி புதைக்கப்பட்ட நிலங்களை பயன்தரும் விவசாய நிலங்களாக மாற்றுவதற்கும் பொருளாதார சமூக உட்கட்டமைப்பு மற்றும் கைத்தொழில்களை விரிவாக்கி பயன்பெறுவதற்கும் நிலக் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியதன் அவசியம் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள் தொடர்பான மதிப்பீட்டு ஆய்வுகளின் அடிப்படையில் 1302 சதுர கிலோ மீற்றர்கள் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசங்களாகவும் மனித வாழ்க்கைக்கு அச்சுறுத்தலான பிரதேசங்களாகவும் இனங்காணப்பட்டுள்ளன.

பலநாடுகளில் யுத்தம் முடிவடைந்த பின்னரும் கண்ணிவெடிகளாலும் வெடிக்காத வெடி பொருள்களாலும் இழப்புகளும் காயங்களும் ஏற்படுவதோடு பலர் அங்கவீனர்களாக காணப்படுகின்றனர். யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கும் இது சவாலாக உள்ளது.

இலங்கையில் கண்ணிவெடியகற்றும் செயன் முறைகள் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களான **HALO Trust, MAG, SHARP, DASH** மற்றும் இலங்கை இராணுவம் என்பனவற்றின் தொழில்நுட்ப உதவியுடனும் அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளினதும் இலங்கை அரசினதும் நிதிப்படுத்தலுடனும் அரசினால் முன்னெடுக்கப்படுகின்றன.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் 25 சதுரகிலோ மீற்றர் நிலப்பரப்பு மட்டுமே கண்ணிவெடி அபாயமுள்ள பிரதேசமாக காணப்படுகின்றது.

25 சதுரகிலோ மீற்றர்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் முகமாலை, கரைச்சி, பூநகரி மற்றும் கண்டாவளை பகுதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மரிடைம்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு மற்றும் துணுக்காய் பகுதிகளும் யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு (நாகர்கோவில்) தென்மராட்சி பகுதிகளும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு, வவுனியா, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவுகளும் மன்னார் மாவட்டத்தில் மடு, மாந்தைமேற்கு, மன்னார் நகரம் மற்றும் முசலி ஆகிய பிரதேசங்களும் கண்ணிவெடியகற்ற வேண்டிய பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளன என மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இலங்கை 2017 ஆம் ஆண்டு கண்ணிவெடியகற்றும் ஒட்டாவ சர்வதேச பிரகடனத்தில் அரச பங்காளியாக கைச்சாத்திட்டுள்ளது. இதில் 164 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. கண்ணிவெடியகற்றல் தொடர்பாக மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு அதன் கீழ் வருகின்ற தேசிய கண்ணிவெடியகற்றும் நிறுவனத்துடன் இணைந்து 5 ஆண்டுகளுக்கான கண்ணிவெடியகற்றலுக்கான தேசிய உபாயத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

இதனடிப்படையில் தகவல் முகாமைத்துவ தரவுகள் பெறப்பட்டு கண்காணிப்பு மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் இலங்கையை 2020ஆம் ஆண்டு கண்ணிவெடியற்ற நாடாக பிரகடனப்படுத்தும் வேலைத்திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் வெடிக்காத வெடி பொருட்களையும் போரினால் ஏற்பட்டுள்ள எச்சங்களையும் (**Explosive Remnants of War- ERW**) இல்லாது ஒழிக்கும் வேலைத்திட்டங்கள், கண்ணிவெடிகள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம், கண்ணிவெடியில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான முன்னெடுப்புக்கள் கண்ணிவெடியகற்றலில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக தர நிர்ணயங்களை அனுசரித்தல், உள்நாட்டில் கண்ணிவெடியகற்றலுடன்தொடர்புபட்ட ஆற்றலை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் என்பன உள்வாங்கப்பட்டுள்ளன என மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இம் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் நேற்று 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடியகற்றல், எதிர்காலத்தில் கண்ணிவெடிகளின் பாவனையை தடைசெய்தல் தொடர்பான 17 ஆவது அரச பங்காளிகளின் சர்வதேச கூட்டத்தொடர் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் வளாகத்தில் ஜெனிவாவிற்கான மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையுடன் (**GenevaInternational Centre for Humanitarian Demining- GICHD**) நடைபெற்றது.

ஒட்டாவா பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள அரசபங்காளிகளின் 17 ஆவது சர்வதேச கூட்டத்தொடரில் அரச உயரதிகாரிகள், அபிவிருத்தி பங்காளர்கள், அமுலாக்கல் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றின் பங்குபற்றலுடன் முன்னேற்ற மீளாய்வும் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இக்கூட்டத் தொடரில் கண்ணிவெடியகற்றலில் இலங்கை முன்னணியிலுள்ள நாடுகளில் ஒன்றாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் அரச பிரதிநிதிகளாக மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் தூதுவருமான ஏ.எல்.ஏ.அசீஸ் மற்றும் அமுலாக்கல் நிறுவனப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். (இ-7)





யாழ்.நீரிழிவுக் கழகத்தினர் சமுதாய மருத்துவ பீடத்தினருடனும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருடனும் இணைந்து யாழ்.பல்கலைக்கழகத்தில் நீரிழிவு நோயாளரை இனம்காணும் முகமாக நடைபெற்ற மருத்துவ முகாமின் போது...

## நீதிமன்றத்தில் சுவிங்கம் சாப்பிட்ட இளைஞனுக்கு 1000ரூபா அபராதம்

(திருமலை)

நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது சுவிங்கம் சாப்பிட்ட இளைஞன் ஒருவரை 1000 ரூபாய் அபராதம் செலுத்துமாறு திருகோணமலை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இதன்போது நீதிமன்றத்தை அவமதித்ததுடன் ஒழுக்கமற்ற விதத்தில் நடந்து கொண்டமைக்காக திருகோணமலை நீதிமன்ற பொலிஸாரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த குற்றப்பத்திரம் திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம். எச். எம். ஹம்ஸா முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து சுவிங்கம் சாப்பிட்ட இளைஞனுக்கு தண்டம் செலுத்துமாறு கட்டளை பிறப்பித்தார். திருகோணமலை, மொரவெவ பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவருக்கே இவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதிமன்றத்தில் வழக்கிற்கு வருகின்றவர்களும், அவர்களது உறவினர்களும் நீதிமன்றத்தை மதித்து செயற்பட வேண்டும்எனவும் அவ்வாறு செயற்படாதவர்கள் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை எடுப்பதாக நீதவான் திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தார். (இ-7)

## சமூக வலைத்தள விழிப்புணர்வு செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

சமூக வலைத்தள (**Social Media**) விழிப்புணர்வு செயலமர்வு கடந்த 25 ஆம் திகதி காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.


காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த செயலமர்வில் சமூகவலைத்தளங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது எப்படி அதன் அவசியம். எதிர்பாராத தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சமூக வலைத்தள செயற்பாடுகள் இணைய மோசடிகளும் சட்டமும் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இச் செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கு சமூக வலைத்தள பாதுகாப்பு தொடர்பான தகவல் புத்தகமும் வழங்கப்பட்டது. இதில் பொலிஸார்.காரைநகர் பிரதேச இளைஞர்.யுவதிகள். கலந்து கொண்டனர். (இ-9)

## ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பட்ஜெட் 6 ஆம் திகதி சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தவிசாளர் அ.ஜெயகாந்தன் தெரிவித்தார், உத்தேச வரவு-செலவுத்திட்டம் சபையில் முன்மொழியப்பட்டு கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் நேற்று 30 ஆம் திகதி வரை நாரந்தனை, புளியங்கூடல், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேச சபை உப அலுவலகங்களிலும் ஊர்காவற்றுறை பிரதேச சபையிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)



## பதில் கல்விப் பணிப்பாளராக இரவீந்திரன் நேற்றுப் பொறுப்பேற்பு


(கரணவாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் பதில் கல்விப் பணிப்பாளராக யோகசாமி இரவீந்திரன் நேற்று வெள்ளிக்கிழமை தனது கடமையை பொறுப்பேற்றார்.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த சி.நந்தகுமார் ஓய்வுபெற்று சென்றதையடுத்து அவ் வெற்றிடம் நிரப்பப்படவில்லை.

இந்நிலையில் வடமராட்சி வலயக்கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி பின்னர் மாகாண கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய யோகசாமி இரவீந்திரன் பதில் கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்றுள்ளார். (இ-60)

# நாவலர் காட்டிய அறநெறி



ஆறுமுகநாவலர் மறைந்து 139 ஆண்டுகள் ஓடிவிட்டன. இக்கால ஓட்டத்தில் அவருடைய பணிகள் மீளவும் நினைவு கூரப்படுகின்றன. இன்றைய இளையவர் நாவலரை இனங்காணச் செய்ய வேண்டியது இன்றியமையாதது. அவருடைய வாழ்வும் பணியும் எவ்வாறு எமக்கு வழிகாட்டும் என்பது இன்றுஅவர்களுடையஎண்ணத்திலே தொக்கி நிற்கும் கேள்வியாகும். இக்கேள்விக்குரிய மறுமொழியை மூத்தோர் எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

நாவலர் 57 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தார். 1822 ஆம் ஆண்டு பிறந்த அவர் 1879 ஆம் ஆண்டு மறைந்தார். வாழ்ந்த காலம் குறுகியதாக இருந்த போதும் அவர் செய்த பணிகள் அளப்பரியவை. அப்பணிகள் பற்றிய ஆய்வுகளும் பல நடந்துள்ளன. 1979 ஆம் ஆண்டு நாவலர் மறைந்து நூற்றாண்டு கழிந்தமைசிறப்பாக நினைவு கூரப்பட்டது. நாவலருடைய நூறாவது குரு பூசையின் நினைவாக நாவலர் நூற்றாண்டுமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அந்த மலர் நாவலர் பணிகளை நன்கு ஆவணப்படுத்தியுள்ளது. அதன்பின்னரும் பல மலர்கள் வெளிவந்துள்ளன. அவற்றிலும் நாவலருடைய பன்முகப்பட்ட செயற்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும்நாவலருடைய பணிகளுக்குக்கூடாக அவர் காட்டிய அறநெறியை நாம் இன்று நன்கு உணர வேண்டியுள்ளது. இப்போது காலம் மாறிவிட்டது. நாவலரின் நெறியைச் செயற்படுத்துவது கடினம் என்று கருத்துரைப்பவர்களும் எம்மிடையே பலர் உளர். அவர்களுக்கும் நாவலர் காட்டிய அறநெறியைமீளவும்தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. நாவலர் தோன்றிய காலம் தமிழர் பண்பாடு பிற பண்பாட்டால் தளர்வடைந்த காலமாகும். கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கால் மேலைத் தேயப் பண்பாடும் ஆங் கில மொழியும் யாழ்ப்பாணத்தில் பரவலாக்கம் பெற்ற காலமாகும். மரபான தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் இதனால் தளர்ச்சியுற்றன. எனவே அவற்றை மீண்டும் உயர்த்த நாவலர் தனி மனிதனாக நின்று பணி செய்தார்.

தமது முன்னோர்களின் வழி நின்று யாழ்ப்பாணத் தமிழர் பண்பாடு சிதைவடையாமல் ஓர் அறநெறியை உருவாக்கினார். மேலைத் தேயப் பண்பாட்டைத் தமிழர் பலர் விரும்பினர். ஆங்கில மொழிப்புலமையிலும் அவாவுற்றனர். அவர்களைத் திசை திருப்ப ஒரு செல்நெறியை நாவலர் நினைவுபடுத்தினார். ஆங்கில மொழியைக் கற்றுத் தமிழ்மொழி இலக்கிய இலக்கண நூல்களையும் கற்றுப் புலமை பெற்றார். ஆனால் பார்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளுக் கிணங்க யாழ்.வெஸ்லியன் மிசன் கல்லூரியில் தமிழ் ஆங்கில ஆசிரியராகப் பணி செய்தார்.

சூழல் அவரை மாற்ற முயன்றாலும் அவர் தன்னுடைய முன்னோர் அறவழியிலேயே பணி செய்ய விரும்பினார். தமிழ்மொழியையும் தமது வழிபாட்டு மரபையும் பேண இந்தியாவுக்குச் சென்றார். அங்கு அவரது பணிக்காக மொழிப்பேணலை விரிவாக்கம் செய்ய நூல்களை அச்சிட வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றார்.

சிறுவர் தமிழ் மொழிக் கல்வியை வளப்படுத்தப் பாலபாட நூல்களை எழுதி அச்சிட்டார். அவருடைய "வித்தியாநுபாலனயந்திரம்" என்ற அச்சகம் யாழ்ப்பாணத்திற்கு அவர் பணியை அறிமுகப்படுத்தியது. மரபான தமிழ்க்கல்விப் பயிற்சியை விடப் பாடநூல்கள் தமிழ் மொழிக் கல்வியைச் சிறாரிடையே பரவச் செய்யப் பெரிதும் உதவும் என எண்ணினார். ஆங்கில மொழிக் கல்வியைத் தமிழரிடையே பரப்புவதற்காக மேலைத் தேசத்தவர் பாட நூல்களை வெளியிட்டிருந்தனர். பிற மொழிக் கற்கையை அப்பாட நூல்கள் பெரிதும் ஊக்குவித்தன. இதனை நன்குணர்ந்த நாவலர் புதுமையை நாடிச் செல்லும் தமிழ்ச்சிறாரை ஈர்க்கத் தமிழ்மொழிப் பாட நூல்களை வெளியிட்டமை அவரது அறநெறியாகும்.

தமிழ்மொழியைக் கற்கும் சிறார் தமது முன்னோருடைய தமிழ் நூல்களையும் தேடி வருவர் என நாவலர் தொலைநோக்கிலே எண்ணிச் செயற்பட்டார். நன்னூல், திருக்குறள் பரிமேலழகர் உரை, பெரியபுராண வசனம், திருமுருகாற்றுப் படை என அவர் பதிப்பித்த நூல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அவருடைய பிறிதொரு பணியான "பிரசங்கம்" என்னும் திறனே அவருக்குத் தென்னகத்திலே "நாவலர்" என்ற சிறப்பான பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது. ஆறுமுகம் என்னும் அவரது இயற்பெயருடன் இப்பட்டம் இணைய "ஆறுமுக நாவலர்" என எல்லோராலும் போற்றப்பட்டார். அவருடைய உரையாற்றும் திறன் எல்லோரையும் கவர்ந்தது. "நாவலர்" என்ற பட்டத்தைப் பெறுவதற்கு முன்னரே அவருடைய முதற்பிரசங்கம் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சைவத்திருக்கோயில்களிலே அவர் ஆற்றிய உரைகள் கல்வியறிவில்லாத வரையும் கேள்வியறிவு பெற வைத்தது. வள்ளுவர் கூறிய செல்வத்துள் செல்வமான செவிச் செல்வத்தை எல்லோரும் பெற வாய்ப்புக் கிடைத்தது.

குறிப்பாக ஏட்டுக்கல்வி வாய்ப்பு அற்ற பெண்களுக்கு அவர்கள் அறிவு பரவலாக்கம் பெறத்துணை செய்தது. சைவம், தமிழ், வழிபாடு, சமூகம் என்பன பற்றிய அவர்களுடைய பட்டறிவு மேலும் துலக்கம் பெற்றது.

நாவலருடைய உரையாற்றல் அறநெறி ஒன்றை அவர்களுக்குக் காட்டியது. தெளிவான கல்வி அறிவை எல்லோரும் பெற வேண்டும் என்ற விருப்பை ஏற்படுத்தியது.

மேலும் பள்ளியிலே சென்று வரன் முறையாகக் கல்வியைப் பயில வேண்டும் என்ற உந்துதலையும் ஏற்படுத்தியது.

"சைவமும் தமிழும் என திரு கண்கள்" என்ற நாவலரது உறுதியான எண்ணமே அவருடைய பணிகளின் அடித்தளமாக அமைந்தது. எல்லா மனிதரும் ஓர் அறநெறியிலே செல்லத் தம்மைப் பயிற்ற வேண்டும். மனித விழுமியங்களை மறவாது வாழ வேண்டும். பண்டைய அறநூல்கள் எல்லாம் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளன.

ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்துவதில் இன்று பல சிக்கல்கள் உள்ளன. விஞ்ஞானத்தின் வியத்தகு ஆற்றல் மனிதனை முற்றாகஈர்த்துள்ளது. பொறிகளின்கையாட்சியால் மனித விழுமியப் பண்புகள் புறந் தள்ளப்பட்டுள்ளன.


குறிப்பாகத் தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியம் சிதைவுற்றுள்ளது. தமிழ் மொழிப் பேணல் பெரிதும் நலிவுற்றுள்ளது. இன்று நாவலர் காலத்தை விட பிற பண்பாட்டு மொழிகளின் செல்வாக்கு மிக்கோங்கியுள்ளன.

இந்நிலையில் தமிழரின் வாழ்வியல் மாற்றங்களைச் சீர் செய்ய ஓர் அறநெறிப் புகட்டல் மிகவும் இன்றியமையாதது. அதற்கு நாவலர் காட்டிய அறநெறியே பொருத்தமானதாகும்.

தனது வாழ்வைச் செம்மைப்படுத்த தாய் மொழிப் பற்றும் வழிபாட்டுச் சூழலும் பேணப்பட வேண்டும். இன்றைய அறநெறிக் கல்விப் பயிற்சியை வழங்கும் அறநெறிப் பள்ளிகள் இக் கருத்தை வலியுறுத்திச் சிறந்த முறையிலே பாடச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே நாவலருக்கு நாம் செய்ய வேண்டிய நன்றிக்கடனாகும்.

**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**

# லிட்ரோ ஹாஸ் நிறுவனம் தம்பர அமில தேரருக்கு பணம் வழங்கியதாக புகார்




(கொழும்பு)

லிட்ரோ ஹாஸ் நிறுவனத்திற்கு சொந்தமான 500 மில்லியன் ரூபாய் நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினம் நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மனு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது லிட்ரோ ஹாஸ் நிறுவனத்தின் நிதிக் கட்டுப் பாட்டாளராக கடமையாற்றிய முதித தமானகம சாட்சி வழங்கியிருந்தார்.

இதன்போது பிரதிவாதிகள் சார்பில் முன்னின்ற ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி எழுப்பிய குறுக்குக் கேள்விக்குப் பதிலளிக்கும் போது சாட்சிக்காரரான முதிததமான கம, 2015 ஆம் ஆண்டின் பின்னர் வணக்கத்திற்குரிய தம்பர அமில தேரருக்கு போக்குவரத்து கொடுப்பனவாக மாதாந்தம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்க நிறுவனத்தின் நிர்வாகிகள் யோசனை ஒன்றை முன்வைத்ததாக தெரிவித்துள்ளார்.

இதற்கு தான் மறுப்பு தெரிவித்ததாகவும், பின்னர் மாதாந்தம் 95 ஆயிரம் ரூபா பணம் லிட்ரோ ஹாஸ் நிறுவனத்தின் இரகசிய கணக்கு ஒன்றின் மூலம் வழங்கப்பட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிறுவனத்தில் கடமையாற்றாத 39 பேருக்கு சம்பளம் வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அலோசியஸ், கசுனின் விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

பேர்ப்பெர்ச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த இருவரும் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இருவரையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "அரசியலில் ஈடுபடும் எண்ணமில்லை"

(கொழும்பு)

அரசியலில் ஈடுபடப் போவதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என முன்னாள் கிரிக்கெட் வீரரும், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் போட்டி மத்தியஸ்தருமான ரொசான் மஹாநாம தெரிவித்துள்ளார்.

அரசியலில் களமிறங்கும் எவ்வித எண்ணமும் கிடையாது. கிரிக்கெட் விளையாட்டு ஊடாக நாட்டுக்கு உச்ச அளவில் சேவை செய்துள்ளேன்.


எனினும் எந்தவொரு நேரத்திலும் அரசியலில் ஈடுபடும் திட்டம் கிடையாது என தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

109



“இந்தோனேசியாவிலுள்ள பற்றேவியாவே மேற்படி டச் சுக்காரர்களின் ஆசியப் பிராந்தியங்களுக்கான நிர்வாக மையப் பகுதியாக அமைந்திருந்தது. அதன் அதிகாரத்துக்குட்பட்ட நாடுகளில் இலங்கை மிக முக்கியமான இடத்தைப் பெற்றுக் காணப்பட்டது. இலங்கைக்கான நிர்வாகத் தலைமை அதிகாரியாகத் தேசா திபதியும் அவருக்கு உதவியாக டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின் கவுன்சில் அதிகாரிகளும் பற்றேவியா அரசினால் நியமிக்கப்பட்டார்கள்”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

1796 இல் பிரித்தானியர் கைக்கு இலங்கை மாறும் வரையில் போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களைத் தனி நிர்வாகத்தின் கீழ் ஆட்சி செய்தனர் என்பது பல்வேறுபட்ட போர்த்துக்கீச டச்சு ஆவணங்களிலிருந்தும் தெளிவாகப் புலப்படுகின்றது.

பிரித்தானியரும் 1833 இல் தமது நிர்வாக வசதிக்காக இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதன் பொருட்டே மேற்படி பிரதேசங்களின் தனித்துவமான நிர்வாக அமைப்பு முறை இலங்கை வரைபடத்திலிருந்து அகற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதுபற்றி அடுத்து வரும் அத்தியாயத்தில் ஆராயப்படும்.

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆசியப் பிராந்தியத்திற்கான மேலாதிக்க நிர்வாகம் நெதர்லாந்து அரசின் வழிகாட்டலுக்கு அமைய பற்றேவியாவிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்டது.

தேசாதிபதியையும் இந்தியப் பிராந்திய சபையையும் கொண்ட மத்திய அதிகார பீடம் பற்றேவியாவில் அமையப் பெற்றிருந்தது.

விரிவுபடுத்திய டச்சு ஆட்சியின் எல்லைகளுள் காணப்பட்ட பல்வேறு ஆட்சிப் பிரதேசங்கள் இந்த மத்திய அதிகார பீடத்தின் கீழ்ச் செயற்படும் அந்தந்த அரசாங்கங்களால் நிர்வகிக்கப்பட்டன.

பொதுவாக இந்த அரசுகளும் மத்திய அரசைப் போன்றே நிர்வகிக்கப்பட்டன. தேசாதிபதியின் தலைமையில் மூத்த அதிகாரிகளைக் கொண்ட சபை ஒன்று இந்த அரசாங்கங்களை நிர்வகித்தது.

இந்தோனேசியாவிலுள்ள பற்றேவியாவே மேற்படி டச்சுக்காரர்களின் ஆசியப் பிராந்தியங்களுக்கான நிர்வாக மையப் பகுதியாக அமைந்திருந்தது.

அதன் அதிகாரத்துக்குட்பட்ட நாடுகளில் இலங்கை மிக முக்கியமான இடத்தைப் பெற்றுக் காணப்பட்டது.

இலங்கைக்கான நிர்வாகத் தலைமை அதிகாரியாகத் தேசாதிபதியும் அவருக்கு உதவியாக டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின் கவுன்சில் அதிகாரிகளும் பற்றேவியா அரசினால் நியமிக்கப்பட்டார்கள்.

றிக்ளொப் வான் கோன்ஸ் (Rijklof van Goens) என்பவர் 1658 இல் தளபதியாகவும் பின் 1665இல் தேசாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் டச்சுக்காரர் பெற்ற வெற்றிக்கும் பொருளாதார நலன்களுக்கும் சமய அபிவிருத்திக்கும் நிர்வாக கட்டமைப்புக்களுக்கும் வான் கோன்ஸின் பங்களிப்பு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று அடுத்து முக்கியமானவர்களுள் லோறன்ஸ் பில் (Laurens Pyl- 1680- 1692), பறொண் வொன் இன்கொப் (Baron Von Inhoff- 1736-1740), யன் சுருடர் (Jan Schreder 1757-1763) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

டச்சுக்காரரின் நிர்வாகத்தின் அதிகார மட்டம், இலிகிதரிலிருந்து சிவில் அதிகாரிகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. கடற்படை, தரைப்படைக்குப் பொறுப்பாகவும் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவும் பிராந்தியத்திற்கான தளபதி ஒருவர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

1656 இல் கொழும்பு கைப்பற்றப்பட்டபோது காலி நகரமே முதலில் தேசாதிபதியின் தலைமை நிலையமாக இருந்தது. பின்னர் 1658 இல் கொழும்புக்கு மாற்றப்பட்ட தலைமையகம் டச்சுக்காரரின் ஆட்சி 1796 இல் முடியும் வரை நிலைத்திருந்தது.

இலங்கை மூன்று நிர்வாகப் பிரிவுகளாக்கப்பட்டது. அவை கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகியன ஒவ்வொரு தளபதியின் கீழும் விடப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் ஆட்சியதிகாரம் புத்தளத்திலிருந்து வடக்காகப் பரந்து வடமேற்குக் கரையோரம், வடகிழக்குக் கரையோரம் ஆகியவற்றைத் தொடர்ச்சியாகச் சுற்றிவந்து மட்டக்களப்பின் தென்பாகம் வரை விரிந்திருந்தது.

ஆனால் 1671 இல் மட்டக்களப்புக்குத் தனியாக ஒரு இராணுவத்தளபதி நியமிக்கப்பட்டார். இவைதவிர உயர் மட்ட அதிகாரிகளும் மூன்று திசாவைமாரும் (Dissaves) கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறைப் பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

அவர்களின் கீழ் உதவி திசாவைமார் நியமிக்கப்பட்டிருந்தனர். இத்திசாவைமார் நிதி நிர்வாக அலுவல்களுக்குப் பொறுப்பாக இராணுவத் தளபதியின் கீழ் இயங்கினர். வியாபார மையப் பகுதிகள் உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு ஓவர் கூத (Opperhoofd) என்ற உயரதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

மேற்கூறப்பட்ட முக்கிய மூன்று நிர்வாகப் பிரிவுகளுக்கான அதிகார மையப் பகுதியிலிருந்து தூரமாகவுள்ள பிரதேசங்களுக்கு மேற்படி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். குறிப்பாக கற்பிட்டி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு அவ்வாறான அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

டச்சுக்காரர் தமது பிராந்திய நிர்வாக அமைப்பு முறைகளுக்கு ஏற்கனவே யாழ்ப்பாண இராச்சியக் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த போர்த்துக்கீசர் காலத்திலும் இருந்த மரபு ரீதியான நிர்வாகக் கட்டமைப்பையே பெரும்பாலும் பின்பற்றினர்.

உள்ளூர் சிவில் நிர்வாகிகளின் அறிவும் அனுபவமும் அவர்களின் சுதேச மொழியறிவும் டச்சுக்காரருக்கு உடனடித் தேவையாகக் காணப்பட்டது.

மேலும் அவர்களின் நிர்வாகச் செலவினங்களைக் குறைப்பதற்கும் உள்ளூர் அதிகாரிகளைத் தமது நிர்வாக அமைப்பினுள் சேர்ப்பது வாய்ப்பாக்கப்பட்டது.

(தொடரும்)

# மக்களின் நிலைப்பாட்டை அறிந்து மீண்டும் நாட்டின் ஸ்திரத்தன்மையை பேண வேண்டும்

## அஸ்கிரிய மகாநாயகர் வலியுறுத்து



(கொழும்பு)

மக்களின் நிலைப்பாட்டை அறிந்து மீண்டும் நாட்டின் ஸ்திரதன்மையை பேண வேண்டும் என அஸ்கிரிய மகாநாயகர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகள் என நாடாளுமன்றில் உள் ளவர்கள், ஒரு நிலையான தன்மையைப் பேணுவதில்லை.

அவர்கள் நேற்று ஒரு கட்சியிலும் இன்று ஒரு கட்சியிலும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இதனால் மக்களுக்கு அவர்கள் மேலுள்ள மரியாதையும் குறைவடைந்து செல்கிறது.

எனவே மக்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் விருப்பங்களை அறிந்து, உறுதியான ஒரு நிலைபாட்டை எடுத்து அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டியது கட்டாயமானதாகும் எனவும் அஸ்கிரிய மகாநாயகர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 1000 ரூபா சம்பள உயர்வு குறித்து

# தொழிற்சங்கள்-முதலாளிமார் பேசி இறுதி முடிவெடுக்க பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் எட்டப்படும் இறுதி தீர்மானத்தை நாளை மறுதினம் 03 ஆம் திகதி தனக்கு அறியத் தருமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தோட்டத் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளிகளின் சம்பள உயர்வு தொடர்பில் தற்போது ஏற்பட்டிருக்கும் இழுபறி நிலை குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் காலை விசேட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இச்சந்திப்பில் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் முதலாளிமார் சம்மேளனத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தோட்டத் தொழிலாளிகளுக்கு கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு நீண்ட நாள் போராட்டத்துக்குப் பின்னரும் இது வரை கிடைக்கவில்லையென பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தோட்டத் தொழிற்சங்கத்தினர் பிரதமரிடம் சுட்டிக்காட்டினர்.

தோட்டத் தொழிலாளர்கள் கேட்கும் சம்பள உயர்வை வழங்க முடியாமலிருப்பதாகவும் தொழிற்சாலைகளை இழுத்து மூடும் நிலை தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும் முதலாளிமார் பிரதமரிடம் தெரிவித்தனர்.

இருதரப்பும் முன்வைத்த கோரிக்கைகளை செவிமடுத்த பிரதமர், இப்பேச்சுவார்த்தையின் இழுத்தடிப்பு நாட்டின் பொருளாதாரத்துக்கு உகந்ததல்ல என்பதனால் வெகுவிரைவில் இறுதித் தீர்மானத்துக்கு வருமாறும் தெரிவித்தார்.

மேலும் தொழிற்சங்கங்கள் எதிர்பார்க்கும் சம்பள உயர்வு மற்றும் முதலாளிமார் சம்மேளனம் வழங்க முன்வந்துள்ள சம்பள உயர்வு தொடர்பிலும் விரைவில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வருமாறும் அதனை தனக்கு அறிவிக்குமாறும் பிரதமர் இருதரப்பினருக்கும் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினரும் முதலாளிமார் சம்மேளத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (இ-7)

# 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் இருவர் கைது!

(கொழும்பு)



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் ஒரு தொகை தங்க ஆபரணங்களைக் கடத்திவர முற்பட்ட இருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரும் மாலைதீவைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரும் இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் இரவு மாலைதீவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தபோது அவர்களின் நடத்தையில் சந்தேகமடைந்த அதிகாரிகள், பயணப் பொதியை சோதனையிட்டபோது மறைத்து கொண்டு வந்த ஒரு தொகை தங்க ஆபரணங்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கழுத்து மாலை 2 உட்பட இரு தங்கபிஸ்கட்டுகளைப் பயணப்பொதியில் மறைத்துக்கொண்டு வந்தபோதே அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 30 இலட்சத்து 48 ஆயிரத்து 810 ரூபா பெறுமதியான 233 கிராம் நிறைகொண்ட ஒரு தொகை தங்க ஆபரணங்களை குறித்த நபர்களிடமிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளுக்குட்படுத்தியுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1573

### சாரா

எப்பொழுதும் அமைதியாய் காணப்படுபவர்கள் தான் மிக ஆக்ரோஷமாக சத்தமிட்டு புலம்பிக் கொண்டிருப்பார்கள் மனதினுள்



### குலம்

உண்மையாகப் பேசிப் பழகு... உன்னை சுத்தி ஒருத்தன் இருக்கமாட்டான்... பொய்யாகப் பேசிப்பழகு உன்னைச் சுத்தி ஒரு கூட்டமே இருக்கும்



### மகேஸ்

வாழ்க்கையில் பல பேருக்கு நன்றி சொல்... சில பேருக்கு மிகவும் நன்றி சொல்... பலபேர் நம் வாழ்க்கையில் பாடம் கற்பிக்க வந்தவர்கள்



### சிவா

வீட்டு வேலைகளை அம்மா செய்தபோது அது ஒரு வேலையென உணரவேயில்லை.. மனைவி செய்தபோது கடமை தானே எனத் தோன்றியது. மகள் செய்தபோதுதான் மனம் வலித்தது




### கிருஷ்ணவேணி

பதில் வராத ஒரு குறுஞ்செய்தியும் எடுக்கப்படாத ஒரு அலைபேசி அழைப்பும் நம் நேசத்தின் ஆயுளை கொஞ்சம் அசைத்துத்தான் பார்க்கின்றன



### வைதேகி

சிலருக்கு காரியம் ஆகும் வரை GOD ஆகத் தெரியும்.... தம் காரியம் முடிந்த பிறகு DOG ஆக மாறி விடுகிறோம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கை அரசை குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக்கோரி நாடு கடந்த தமிழீழ அரசு கையெழுத்துப் போராட்டம்

(லண்டன்)

மாவீரர் நாளை முன்னிட்டு, இலங்கை அரசை குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக்கோரி நாடு கடந்த தமிழீழ அரசு கையெழுத்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.



தமிழர்தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் தின அனுஷ்டிப்பு நிகழ்வுகள் கடந்த 27 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டன. அந்த நிகழ்வின் போது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று பிரித்தானியா அரசிடம் **Uk to refer Sri Lanka to ICC** என்ற மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளது. அந்த மனுவில் ஒரு இலட்சம் கையெழுத்து பெற்றால் பிரித்தானிய பாராளுமன்றத்தில் இலங்கை அரசாங்கத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவது தொடர்பான விவாதம் ஒன்று நடைபெறும்.

எனவே அந்த விவாதத்தை நடத்துவதற்காக நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாட்டாளர்கள் கையெழுத்து பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் கடந்த 27 ஆம் திகதி நாடுகடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் தலைமையில் **london excel** அரங்கிலும் விளையாட்டு மற்றும் சமூகநலன் பிரதி அமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் தலைமையிலான அணி **Oxford** உலக வரலாற்று மையத்திலும் கையெழுத்து சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# சாவகச்சேரியில் மோதல்

## போத்தல் குத்துக்கு இலக்கான மூவர் படுகாயம்; மூவர் கைது

## கடைக்கு சீல் வைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மூவர் போத்தல் குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வியாழக்கிழமை இரவு சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட மோதலின் போதே இவ் அசம்பாவிதம் இடம்பெற்றது.

இதில் சண்முகம் வீதி சங்கத்தானையைச் சேர்ந்த 41 வயதான மு.நிரஞ்சன், கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 19வயதான தீசன் ஆகிய இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையிலும், கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 23வயது பிறின்ஸ்சியஸ் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் கடை உரிமையாளர் உட்பட மூவரைக் கைது செய்ததுடன் கடையினையும் சீல் வைத்து மூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குங்கள் அமைச்சர்களுக்கு வழங்காதீர்கள் -மத்தும பண்டார

(கொழும்பு)

"பொதுச் சேவையிலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குங்கள். ஆனால் அமைச்சர்களுக்கும் அவர்களது அமைச்சுக்கும் சம்பளம் வழங்க வேண்டாம்" என பாராளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டார தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றவிவாதத்தில் கலந்து கொண்டே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் காலியைச் சேர்ந்த சிங்களவர் மற்றையவர் தமிழர். குறித்த இரு பொலிஸ் அதிகாரிகளையும் கொலை செய்து விட்டு அவர்களது துப்பாக்கிகளை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

ஒரு பொலிஸ் அதிகாரியின் கையை வெட்டியுள்ளார்கள். இவ்வாறான அநியாயங்கள் கடந்த காலங்களில் இடம்பெறவில்லை.

அரசியல் செய்யும் தேரர்கள் கூறினார்கள் நாட்டை பாதுகாக்க மகிந்த ராஜபக்ஷவை அழைக்குமாறு ஆனால் பாதுகாப்பு படைகளின் பிரதானியை மைத்திரிபால சிறிசேன கைது செய்தது மகிந்தவின் கள்ள அரசாங்கத்தில். 11 மாணவர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவால் 2011இல் முதல் முறைப்பாடு பதியப்பட்டது.



அம் முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்தே முப்படைகளின் பிரதானி கைது செய்யப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை கொண்டு வருவதற்கு நிறைய பேர் கத்தினார்கள். அவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க விடப்போவதில்லை என கூறினார்கள்.

ஆனால் இம்முறை 38 இடங்களில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. அரசியல் செய்யும் தேரர்களே இவற்றுக்கு பதில் சொல்லுங்கள்.

அமைச்சுக்களின் நிதியை முகாமை செய்யும் பொறுப்பு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கேயுரியது. அமைச்சர்களுக்கும் அமைச்சு அலுவலகங்களுக்கும் வழங்கும் நிதி தொடர்பான முழு பொறுப்பு செயலாளர்களுக்கேயுரியது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமையால் அமைச்சர்களின் வாகனங்களை மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த பொறுப்பு அமைச்சுக்களின் செயலாளருக்குரியது.

இடை நிறுத்தியுள்ள கம்பெரலிய வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்தார். (இ-7)

# நாவலர் விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலையின் மண்டபத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் சிவராஜசிங்கம் ஜெயகாந்த், சிறப்பு விருந்தினராக வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-4)

# மின்விளக்குகள் பொருத்துதல்

(யாழ்ப்பாணம்)



அச்சுவேலி 4 ஆம் வட்டாரப் பகுதியில் வீதி மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை நேற்று 30 ஆம் திகதி நடைபெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிலும் அச்சு வேலி விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் நிதி அன் பளிப்பிலும் குறித்த மின் விளக்கு பொருத்தும் நடவடிக்கை இடம்பெற்றது. (இ-9)

# மூன்று விபத்துக்களில் மூவர் படுகாயம்!

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மூன்று விபத்துச் சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தென்மராட்சி கப்பூது வெளிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற டச் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 30 வயதான க.ரவீந்திரன் என்பவரை மகேந்திரா வாகனம் மோதியதில் காலில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். வியாழக்கிழமை இரவு 7மணியளவில் நுணாவில் பகுதியில் துவிச்சக்கரவண்டியில் சென்ற 75 வயதான க.சிவமணி என்ற முதியவரை வாகனம் மோதியதில் முதியவர் சுயநினைவு இழந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஏ9 வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற 19 வயது வ.கிரிஷன் என்ற இளைஞனை ஆட்டோ மோதியதில் இளைஞன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மூன்று விபத்துச் சம்பவங்கள் தொடர்பிலும் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 200 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 450 | 500 |
| தக்காளி | 300 | 400 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 100 | 140 | 150 | 120 |
| கரட் | 200 | 200 | 210 | 350 |
| பூசணி | 80 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 160 | 110 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 95 | 120 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 300 | 300 | 200 | 120 |
| லீக்ஸ் | 200 | 210 | 140 | 250 |
| பீற்றூட் | 160 | 180 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 210 | 280 |
| முருங்கைக்காய் | 600 | — | 300 | 400 |
| போஞ்சி | 150 | 200 | 240 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | 130 | 120 |
| கீரை – 1பிடி | 60 | 60 | 40 | 60 |
| தேசிக்காய் | 400 | 500 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 300 | 200 | — | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 140 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 20 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 30 |
| ஈரப்பலா | 70 | 80 | 140 | 100 |

# ஈழப்புரட்சி அமைப்பின் எழுச்சிக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

ஈழப்புரட்சி அமைப்பின் **(EROS-EDF)** எழுச்சிக் கூட்டம் இன்று முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெறும்.(இ-5)

# புதையல் தோண்டிய நால்வர் கைது



(தங்காலை)

தங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லிக்குடாவ - தங்கால்ல பகுதியில் புதையல் தோண்டிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்லிகுடா பகுதியில் அமைந்துள்ள வீட்டின் அறையில் புதையல் தோண்டும் பணி இடம் பெறுவதாக நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)




# உலகப்பற்று



போதிவனத்தில் தியானத்திலிருந்த புத்தரைத் தரிசிப்பதற்காக நடுத்தர வயதுடைய ஒருவன் காத்திருந்தான்.

புத்தர் தியானம் கலைந்து கண் விழித்தார்.

புத்தரை வீழ்ந்து வணங்கினான். புத்தர் அவனிடம் "நீ யார்?" என்று வினவினார்.

அவன் "என் பெயர் அபிநந்தன்" என்றான்.

புத்தர், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

அபிநந்தன், "பெருமானே, நான் ஒரு ஏழை. எனக்கு மனைவியும் மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். நான் உலகப் பற்றிலும் உலக வாழ்க்கையிலும் உழ்ன்று ஏராளமான துன்பங்களையும் சித்திரவதைகளையும் அனுபவித்து விட்டேன். என்னை சந்நியாசியாக்கிப் பந்த பாசங்களிலிருந்து விடுவித்து ஞானம் அருளுங்கள்" என்றான்.

புத்தர் சிறிது யோசித்து அவனிடம், "அபிநந்தா இந்த மரத்திலுள்ள இலைகள் ஆடுகின்றன. காரணம் என்ன தெரியுமா? காற்று இலைகள் மீது மோதுவதால் மரத்திலுள்ள இலைகள் ஆடுகின்றன. மனித மனங்கள் இந்த இலைகளைப் போன்றவை. மனித மனங்கள் மீது உலகப்பற்று என்கிற காற்று வந்து மோதுகிறது. அதனால் மனங்கள் ஆடுகின்றன. அலைபாய்கின்றன. முதலில் உன் மனத்திலுள்ள பந்த பாசங்கள் அனைத்தையும் உன்னால் நீக்கிவிட முடியுமா?" என்று கேட்டார்.

அபிநந்தன், "புத்த பெருமானே, என்னால் பந்த பாசங்களைத் துறந்து விட முடியும்" என்றான்.

"சரி அப்படியானால் நீ இன்று முதல் போதி வனத்திலேயே தங்கலாம்" என்றார் புத்தர்.

சில நாட்கள் கடந்தன.

ஒரு நாள் புத்தர் அருகிலுள்ள குளத்திற்கு நீராடுவதற்காகச் சென்றார். அப்போது அவர் ஒரு மரத்தின் கீழ், அபிநந்தன் பக்கத்தில் ஒரு நாய்க் குட்டி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்.

புத்தர் அவனிடம், "அபிநந்தா, இது ஏது?" என வினவினார்.

அபிநந்தன், "பெருமானே, இது என் நாய்க்குட்டி. இது என்னை விட்டு அகல விரும்புவதே இல்லை. எப்போதும் என்னுடனேயே இருக்க விரும்புகிறது. ஆதலால் இதை மட்டும் என்னுடன் வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்" என்று கூறி இழுத்தான்.

புத்தர் சிரித்துக் கொண்டே அங்கிருந்து சென்றார்.

மேலும் சில நாட்கள் கடந்தன. புத்தர் முன்பு போலவே நீராடச் சென்று கொண்டிருந்தார்.

இப்போதும் அபிநந்தன் அதே மரத்தடியில் நின்றிருந்தான். அவன் அருகில் நாய்க்குட்டியுடன் ஒரு சிறுவனும் நின்று கொண்டிருந்தான்.

புத்தர் "அபிநந்தா, இந்தச் சிறுவன் யார்?" எனக் கேட்டார்.

அபிநந்தன், "ஐயனே, இவன் என் மகன். இவன் இந்த நாய்க் குட்டியுடன் எப்போதும் இருக்க விரும்புகிறான். இவனால் இந்த நாய்க்குட்டியை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை. ஆதலால் இவனையும்..." என்றான்.

புத்தர் மீண்டும் சிரித்தவாறு அங்கிருந்து சென்றார்.

மேலும் சில நாட்கள் கடந்தன. அன்றைய தினம் புத்தர் நீராடக் குளத்திற்குச் சென்று கொண்டிருந்தார்.

குளத்தின் கரையிலிருந்த அதே மரத்தடியில் முன்பு போலவே அபிநந்தன் நின்று கொண்டிருந்தான். அவனருகில் நாய்க்குட்டி, சிறுவன் ஆகியவர்களுடன் ஒரு பெண்ணும் நின்று கொண்டிருந்தாள்.

புத்தர், "அபிநந்தா, யார் இந்தப் பெண்?" என்றார்.

"பெருமானே, இவள் என் மனைவி. இவளால் இந்தச் சிறுவனை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை. ஆதலால் இவளும்..." என்று கூறி இழுத்தான்.

புத்தர் சிரித்துக் கொண்டே இரண்டு காலிப் பாத்திரங்களை எடுத்தார்.

"அபிநந்தா, இதோ பார்" என்று சொல்லிக் கொண்டே அவர் ஒரு பாத்திரத்தில் கற்களைப் போட்டு நிரப்பினார். அதைக் குளத்து நீரில் விட்டார். அந்தப் பாத்திரம் குளத்தில் மூழ்கியது.

மற்றொரு காலிப் பாத்திரத்தைக் குளத்து நீரில் விட்டார். அது மிதந்து சென்றது.

"அபிநந்தா கனமான பாத்திரம் குளத்தில் மூழ்கி விட்டது. காலிப் பாத்திரம் குளத்தில் மிதந்து செல்கிறது. கனமான பாத்திரம் என்பது பந்த பாசம் எனும் உலகப் பற்று நிறைந்த பாத்திரம். அது பிறவித் துன்பங்கள் என்ற கடலில் மூழ்கிறது. காலிப் பாத்திரம் என்பது ஞானப் பாத்திரம். அது மூழ்காமல் மிதந்து செல்கிறது.

தலையிலிருந்து சில கேசங்கள் தாமாக உதிர்ந்து விடுகின்றன. அவ்விதம் உதிர விரும்பாத கேசங்கள், தலையில் இருந்து கொண்டே நரைத்து நம்மைக் கேலி செய்கின்றன. உதிர்ந்த கேசங்கள் ஓடி விடுகின்றன.

உலகப் பற்று இல்லாதவர்கள் உதிர்ந்த கேசங்களைப் போன்றவர்கள். பந்த பாசங்களில் சிக்கிக் கொண்டவர்கள் உதிர விரும்பாமல் தலையில் நரைத்து நம்மைக் கேலி செய்கிற கேசங்கள் போன்றவர்கள். விலக்க முடியாத பந்த பாசங்கள், உதிர விரும்பாத தலையிலுள்ள நரைத்த கேசங்கள் போன்றவை.

உனது மனம் உலகப் பற்றிற்காகவே படைக்கப் பட்டிருக்கிறது. அதற்கு விலையாக நீ உலகத் துன்பங்களையும் சித்திரவதைகளையும் அனுபவித்தே தீர வேண்டும். நீ இங்கிருந்து செல்லலாம், போய் வா" என்றார் புத்தர்.






## பொன்மொழிகள்

- நாளை இறந்துவிடுவீர்கள் என்றால் எப்படி வாழ்க்கையை வாழ்வீர்களோ அப்படி வாழுங்கள்! நீண்ட நாள் வாழ்வீர்கள் என்றால் எப்படிக் கற்றுக் கொள்வீர்களோ அப்படி கற்றுக் கொள்ளுங்கள்! -மகாத்மா காந்தி
- நடந்து முடிந்த எதையும் நான் ஒருபோதும் கவனிப்பதில்லை. எதை செய்து முடிக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனமாக இருக்கிறேன். -புத்தர்.
- 'ஒரு மரத்தை வெட்டிச் சாய்க்க எனக்கு 6 மணி நேரம் போதுமானது. அதில் முதல் நான்கு மணி நேரத்தை கோடரியை கூர் தீட்டுவதற்காக செலவழிப்பேன்'. -ஆபிரஹாம் லிங்கன்
- 'அமைதி ஒரு புன்னகையில்தான் தொடங்குகிறது' -அன்னை திரேசா

'மூன்று விடயங்களை நெடுநாட்களுக்கு மறைக்க முடியாது. சூரியன், நிலா மற்றும் உண்மை'. -புத்தர்

- வாழ்க்கையின் முடிவுரைதான் முதுமை.-எமிலியா பார் (இங்கிலாந்து நாவலாசிரியர்)





மனச்சான்று நீதிபதியாயிருந்து தண்டனை தருமுன் நண்பனாயிருந்து எச்சரிக்கை செய்யும்.
– ஸ்டானிஸ்லாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அடுத்த தேர்தலுக்கான கூட்டமைப்பின் கவசம்தான் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

கர்ணன் மிகச் சிறந்த வீரன்; கொடைக் குரியவன்; குந்திதேவிக்கும் சூரியப்பிரபுக்கும் மகனாகப் பிறந்தவன்.

தந்தை தாய் இருந்தும் அநாதையாக வாழும் பரிதாபத்துக்குரியவன். காலத்தின் கட்டளையாக துரியோதன சேனையில் இணைந்து கொண்டான்.

நல்லவன் ஒருவன் கெட்டவர் பக்கத்தில் இருந்தால், அது கெட்டவர்களுக்குப் பலமாகும் என்பதை உணர்த்துகின்ற பாத்திரமாகவும் கர்ணனை நாம் பார்க்க முடியும்.

இதனால்தான் பாண்டவர்களுக்கு யுத்த வியூகம் அமைத்த கண்ண பரமாத்மா, கர்ணனிடம் இரண்டு வரங்கள் தருமாறு குந்தியைக் கேட்க வைத்தான்.

இரண்டு வரங்கள் கேட்பது என்பது கௌரவர் சேனையைப் பலவீனப்படுத்துகின்ற தந்திரோபாயம்.

தன் மகனே கர்ணன் என்றிருந்த குந்திதேவி இதயத்தால் அழுதாளாயினும் பாண்டவர்களைக் காப்பாற்றுவதற்காக கண்ணனின் கட்டளைப்படி கர்ணனிடம் இருவரம் கேட்கிறாள்.

இரு வரம் கேட்பதற்கப்பால், இந்த இரு வரத்துக்காக குந்திதேவி செய்ய வேண்டியது என்ன என்பதுதான் விசித்திரம்.

போர்க்களத்தில் கர்ணன் வீழ்ந்து உயிர் துறந்ததும் குந்திதேவி போர்க்களம் சென்று உயிரற்றுக் கிடக்கின்ற கர்ணனைத் தூக்கி மடியில் வைத்து மகனே! என் மகனே! என்று அழுதாக வேண்டும்.

என்ன செய்வது! இறப்புக்கு பின்பேனும் தன்பிறப்புப் பழியை நீக்குவது அவசியம் என்று கர்ணன் நினைக்கிறான்.

கர்ணனை தன் மடியில் வைத்து என் மகனே! கர்ணா என்று குந்தி அழும்போது, அதுகாறும் மறைந்திருந்த உண்மை வெளிப்படுகிறது.

கர்ணன் தன் பிறப்பை உறுதி செய்ய முற்பட்டபோது குந்திதேவி விட்ட தவறு தானாகவே அம்பலமாகிறது.

இதுதான் இயற்கையின் நீதி. இதை இன்னும் விளக்கமாகக் கூறுவதாயின் மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடந்தால், பங்கு போட்டவர்கள் யார் யார் என்ற உண்மை வெளிவருமல்லவா? அதுபோலத்தான்.

அதுசரி, இப்போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறியுள்ளது.

இதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து கூட்டமைப்பின் 14 எம்.பிகள் கையெழுத்திட்டுள்ளனர்.

இதற்காக அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேற்றப்படும் என்ற எழுத்துமூல உத்தரவாதத்தை ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்புக்கு வழங்குவாராம்.

இந்த எழுத்துமூல உறுதிமொழியை கூட்டமைப்பு தன் இடுப்பில் செருகிக் கொண்டால், அடுத்த தேர்தலுக்கு அதுவே கவசகுண்டலமாகும்.

இதை நாம் சொல்லும்போது குந்தி பிராட்டி கூட்டமைப்பு என்றால்; கர்ணனே தமிழ் மக்கள் என்று நீங்கள் யாரும் என்னிடம் கேட்டு விடக்கூடாது.

# பொலிஸார் கொலை-பின்னணியில் கருணாவா? விசாரணை வேண்டும் என்கிறார் நளின் எம்.பி.

(கொழும்பு)

மட்டக்களப்பு - வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டமையின் பின்னணியில் முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளதாக நளின் பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இரத்து செய்யக் கோரும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில், "மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் வீதி சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது பாரதூரமான ஒன்றாகும். அண்மையில் கருணா அம்மான் தனது டுவிட்டர் பக்கத்தில் நாட்டுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் பதிவு ஒன்றை பகிர்ந்திருந்தார்.

அதில், 'சில ஐக்கிய தேசியக் கட்சியினர் கடிதம் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் எனக்கு மிரட்டல் விடுக்கின்றனர். நான் மட்டகளப்பு கருணா அம்மான் . 2004ஆம் ஆண்டுக்கு முந்தைய கருணா அம்மான் என்றால் யார் என மற்றவர்களிடம் கேளுங்கள்" என் பதிவிட்டுள்ளார்.

இதற்கு பின்னரே நேற்று அதிகாலை இரண்டு பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்துடன் கருணா அம்மானுக்கு தொடர்பு இருக்க வாய்ப்புள்ளது.

மகிந்த ர்ாஜபக்ஷ வளர்த்து வரும் கருணா அம்மான் போன்றவர்களைப் பாவித்து இந்த கள்ள அரசாங்கம் நாட்டில் ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தினை கெடுக்க முயற்சிக்கின்றதா என எண்ணத் தோன்றுகின்றது.

இதன் பின்னணியில் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் இருக்கின்றாரா என விசாரணை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# O/L அனுமதிப்பத்திரம் கிடைக்காதோர் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்

(கொழும்பு)

நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 2018ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பிரத்தியேக விண்ணப்பதாரிகளுடைய பரீட்சை அனுமதிப் பத்திரங்கள். தற்போது தபால் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அந்த அனுமதிப்பத்திரம் இதுவரை கிடைக்காத பிரத்தியேக விண்ணப்பதாரிகள் எவரேனும் இருப்பின், அடையாள அட்டை இலக்கத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www. doenets. lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிட்டு, அனுமதிப்பத்திரத்தைத் தரவிறக்கம் செய்து கொள்ள முடியுமென, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில், அத்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கோவில் மேளச் சத்தத்தால் நால்வர் வைத்தியசாலையில்

(மின்னேரியா)

மின்னேரியா - ஹேனயாய பிரதேசத்தில் அமைந்துள்ள பத்திரகாளி கோயில் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டை அடிப்படையாகக் கொணடு நேற்று முன்தினம் இரவு இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக நான்கு பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் ஹிங்குராங்கொடை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆலயத்தின் பூசகருக்கும் மற்றும் ஆலயத்தை சுற்றி வசிக்கும் சிலருக்கும் இடையில் இந்த மோதல் நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தில் இடம்பெறும் பூஜை நடவடிக்கையின்போது அதிக ஒலி எழுவதை அடிப்படையாக கொண்டு இந்த மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மின்னேரிய பொலிஸ் நிலையத்தில் இதற்கு முன்னர் முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட நிலையில், சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டு காலை மற்றும் மாலை நேரங்களில் 10 நிமிடங்கள் பூஜை நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் , குறித்த காலப் பகுதியின் போது அதிக மேள சத்தம் எழுப்பப்படுவதாக தெரிவித்து அயலவர்கள் பூகருடன் மோதலில் ஈடுபட்டனர்.

எவ்வாறாயினும் , பத்திரகாளி கோவிலின் பூசகர் பிரதேசத்தில் இருந்து தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும்

# வீரவன்ச, கம்மன்பில மீது சட்ட நடவடிக்கை அவசியம்

## ஹரீன் வலியுறுத்து

(கொழும்பு)

பொய்ப்பிரசாரங்கள் மூலம் நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் ஏற்படுத்த முனையும் விமல் வீரவன்ச, உதய கமமன்பில உள்ளிட்டவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின பாராளுமன்றஉறுப்பினர்ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, பாரிய இனக்கலவரங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் கூட பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை. எனினும்இவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்களால் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுவது தண்டிக்க வேண்டிய விடயமாகும எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

கண்டி - திகணையில் இடம்பெற்ற கலவரத்தின் போது சாதாரண பொதுமக்கள கூட பொலிஸார் மீது தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. பல்வேறு உடைமைகளுக்கு தீவைக்கப்பட்ட போதும் சம்பவ இடத்தில் இருந்த பொலிஸார் மீது எந்த தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆனால் சட்ட திட்டங்களை நன்கு அறிந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை மீறி செயற்பட்டுள்ளனர். இவ்வாறு செயற்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டியவர்கள்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிட்டு பிரச்சினைகளை ஏற்படுத்தும் இனவாதிகளான உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருககுஎதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
16 2018
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஆணுக்கு நிகராய் இங்கு பெண்களும் உழைக்கையிலே கொடுப்பனவுகளில் மட்டும் பாரபட்சங்கள் ஏன்? சம கூலிபேணுவோம். சமத்துவத்தினை நிலைநாட்டுவோம்.
JSAC

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- வாழ்வில் ஒரு நன்மையாவது செய்யுங்கள். அதனால், பாவம் அனைத்தும் தீர்ந்து விடும்.
- பிறவிப்பிணி நீங்க வேண்டுமானால், ஆசையின் சாயலே அற்றுப் போய் விட வேண்டும். வேறெந்த முயற்சியும் வீணானவை தான்.
- யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு இருக்கட்டும். எதைச் சரி என்று நினைக்கிறீர்களோ அதை கடவுளின் வழியில் செய்து கொண்டிருங்கள்.
- பெண்ணுக்கு நாணமே ஆபரணம். அது இல்லாத பெண்ணைப் பெண் என்றே சொல்ல முடியாது.
- ஆசையை யாராலும் விலக்க முடியாது. உடம்பு என்ற ஒன்று இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். ஆனால், அதை கட்டுக்குள் வைக்க வேண்டும்.
- "கடவுள் என்னுடையவர்" என்ற சிந்தனையை விதைப்பதற்கு ஏற்றது குழந்தைப் பருவமே. பக்தியை குழந்தைப் பருவத்திலேயே கற்றுக் கொடுங்கள்.
- தாயும் தந்தையும் மகிழ்ச்சி அடைந்தால், கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார்.





யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டி கடந்த 28ஆம் திகதி யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது... (க -107)

# பலாலி விண்மீன் அணியை வீழ்த்தி சம்பியனாகியது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்



கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டுக்கழகங்களின் 20 வயதுப்பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டு வந்தது.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது.

இதில் பலாலி விண்மீன் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. பலாலி சார்பாக நிதுசன் கோல் அடித்தார்.

இரண்டாவது, அரையிறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதியது.

இதில் றேஞ்சர்ஸ அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெறறது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக ஈழவேந்தன் 2 கோல்களையும் ஆர்த்திகன் ஒரு கோலையும் அடித்தததுடன், இமையாணன் மத்திய அணி சார்பாக அலெக்சன் ஒரு கோலை அடித்தார்.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

ஆரம்பம் முதல் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற்றது.

முதல் பாதியாட்டத்தில் 3 கோல்களைப் போட்டு, றேஞ்சர்ஸ் அணி ஆதிக்கத்தை நிலை நாட்டியது.

அதே உத்வேகத்துடன் ஆடி இரண்டாவது பாதியாட்டத்தில் மேலும் 2 கோல்களை றேஞ்சர்ஸ் அணி அடித்தது.

முடிவில் 05:00 என்ற கோல்கள் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி அபார வெற்றியீட்டியது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக, வர்மன் 2 கோல்களையும் ஆர்த்தி, கீர்த்தி, ஆர்நியன் தலா ஒரு கோலையும் அடித்தனர்.

இந்தச் சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக விண்மீன் அணியின் ரதனும் சிறந்த கோல் காப்பாளராக நியூட்டன் அணியின் அனுசாந்தும் ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் கீர்த்திகனும் அதிக கோல்களை அடித்த வீரனாக இமையாணன் மத்திய அணியின் அலெக்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)


SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# மரண அறிவித்தல்

மண் மகிழ 07 - 03 - 1950



கண் நெகிழ 29 - 11 - 2018

## கலாபூஷணம் தில்லையம்பலம் தவராசா
### (தில்லை சிவலிங்கம்)

ஆலடி, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தில்லையம்பலம் தவராசா நேற்று முன்தினம் (29.11.2018) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - செல்வரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும் மற்றும் சந்திராதேவியின் பாசமிகு கணவரும் இன்பரூபன், சிலம்பரசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனேசனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

பாரம்பரிய கலைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டி பல சாதனைகள் புரிந்து ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியதோடு கலாபூஷணம், கலைப்பரிதி, கலைச்சுடர், முதலமைச்சர் விருது, சிலம்புச்செல்வன், தேசத்தின் மகுடம் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற இவர் இறுதிவரை தனது கலைப்பணியை ஆற்றி வந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4568)

ஆலடி, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

தகவல்:- குடும்பத்தினர்
076 489 1494


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4569)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119


# 31ம் நாள் நினைவஞ்சலி

கடந்த 30.10.2018 புதன்கிழமை அன்று
இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவர்



## அமரர் சின்னத்தம்பி நவறட்ணம்
(முன்னைநாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

பிறப்பு: 1933.05.25 இறப்பு: 2018.10.30

இன்று (01.12.2018) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆறாத ரணங்களாய் எம் நெஞ்சில்
உம் நினைவுகள் ஆடுதே
அன்று நீர் எம்முடன்
பேசிச் சிரித்த காலங்களை
எண்ணி எண்ணி
தீராத வேதனையில் வாழ்கிறோம்.

கொத்தங்கலட்டி, வல்வெட்டி.

குடும்பத்தினர் (மனைவி)

## ஆவாக் குழுவை...

விசாரணைகளில் தெரியவந்துள் ளது. அதனைவிட அவர்களுக்கு எதிரான பல வழக்குகள் நீதிமன் றங்களில் நிலுவையில் உள்ளன.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் கடந்த சில தினங் களில் 20 இற்கும் மேற்பட்டோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட னர். அவர்களிடம் கிடைத்த தக வலின் அடிப்படையில் ஆவாக் குழு வைச் சேர்ந்த மூவர் கைது செய் யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 24 வயதுக்குட்பட்டவர்கள். அவர்கள் மூவரும் கொக்குவிலைச் சேர்ந்த வர்கள். சந்தேகநபர்களிடம் 7 வாள்கள் மீட்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 3 அடி நீளம்கொண்ட மிகவும் கூரிய வாள்கள்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் மூவரும் இன்று மல்லாகம் நீதிவான் முன்னிலை யில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்த னர்.

ஆவாக் குழுவின் தலைவர் என பொலிஸாரால் அடையாளப்படுத் தப்படும் மோகன் அசோக் கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதி வான் நீதிமன்றில் சரணடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மென்பானங்...

உள்ளிட்ட மென்பானங்களின் விலைகள் 30 சதவீதத்தால் குறைக் கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் வர்த்தக சம்மேளனங்களின் தலைவர்களுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற சந்திப்பை யடுத்தே இந்தத் தீர்மானம் எடுக் கப்பட்டது என்றும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நீரிழிவு நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வ தாகச் சுட்டிக்காட்டி குளிர்பானங் களில் உள்ளடக்கப்படும் சீனியின் அளவுக்கு ஏற்ப வரி அதிகரிப்பு முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனரட்னவால் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது.

இதனால் சோடா உள்ளிட்ட குளிர்பானங்களின் விலைகள் பெருமளவால் அதிகரித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மகிந்த தரப்பால் எந்த தீர்மானத்தையும் சபையில் நிறைவேற்ற முடியாது - சாகல

(கொழும்பு)

மகிந்த தலைமையிலான ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பால் எந்தவொரு தீர்மானத் தினையும் பாராளுமன்றில் நிறை வேற்ற முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் சாகல ரத்நாயக்க குறிப்பிட் டுள்ளார்.



பாராளுமன்ற அமர்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை நிறைவடைந்த தன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பி னர்கள் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தாலும் அவர்களால் ஏதேனு மொரு பிரேரணையை முன்வைத்து அதனை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

ஏனெனில் சபாநாயகர் தவிர்ந்த 224 நாடாளுமன்ற உறுப்பினர் களில் 122 பெரும்பான்மை எம் மிடம் காணப்படுகின்றது.

மீதமுள்ள 102 உறுப்பினர் களைக் கொண்டு அவர்களால் அரசாங்கத்தையும் கொண்டு செல்ல முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## சண்டிலிப்பா...

பவம் நேற்று சண்டிலிப்பாய் சந் திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

நேற்று இரவு 8.00 மணியளவில் கோண்டாவில் வடக்கை சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் சண்டிலிப்பாய் சந்தியால் வந்துள் ளார். அவரை வழி மறித்த இரு இளைஞர்கள் குறித்த இளைஞரி டம் அவரது மோட்டார் சைக்கிளை தருமாறு வற்புறுத்தியுள்ளார்கள். அதற்கு இளைஞர் மறுக்கவே அவர் கள் வைத்திருந்த கத்தியால் இளை ஞரை தாக்கியுள்ளனர்.

அப்போது எதிரே வாகனம் ஒன்று வருவதை அவதானித்த இளைஞர்கள் அந்த இடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர். காயமடைந்த இளைஞர்தானாகவே யாழ்போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறு வதற்காக வந்துள்ளார்.

பின்னர் குறித்த சம்பவம் தொடர் பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட் டதை தொடர்ந்து மேலதிக விசா ரணைகளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (ம-3,9)

## அமைச்சுக்களி...

அரசியலமைப்பின் 148ஆவது பிரிவின் கீழ் பாராளுமன்றமே அரச பொது நிதியை கட்டுப்படுத்து கிறது.

எனவே, கடந்த 15ஆம் திகதிக் குப் பின்னர், அனைத்து அமைச் சுக்களின் செயலாளர்களும், அமைச் சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அவர்களின் பிரத்தியேக அலு வலகர்களுக்கான சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளை பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்று பிரே ரணையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

பாராளுமன்றம் மீண்டும் எதிர் வரும் டிசம்பர் 5ஆம் திகதி கூடும் என சபாநாயகர் கருஜெயசூரிய அறிவித்துள்ளார். (ம-3)

# எனது நியமனம் சட்டபூர்வமானது

## மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தனது நியமனம் சட்டபூர்வ மானது என பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னிலையில் வைத்து தெரிவித்துள்ளார்.

கொழும்பு - சுகதாஸ உள்ளக அரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வொன் றில் கலந்து கொண்டு கருத்து வெளி யிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர், சின் சிண்டு முடியும் வேலைகளை செய்யப்பார்க் கின்றனர்.

அது நடக்காது. எனது நிய மனம் சட்டபூர்வமானது. ஜனாதி பதி தனது நிறைவேற்று அதி காரத்தை பயன்படுத்தி செய்ததை யாரும் கேள்விக்குட்படுத்த முடி யாது என தெரிவித்துள்ளார். (ம-3)

# பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் - நாமல்

(கொழும்பு)

உடனடியாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பு என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வழக்கு விசாரணைகளுக்காக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகிய பின் னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பங்காளியாக இருக்க நான் தயாரில்லை. ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, மக்கள் விடுதலை முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழப்பமடைந்திருக்கும் விதத்தை பார்த் தால், மத்திய வங்கியின் பிணை முறி பணம் இவர்களுக்கு கிடைத்திருக் குமோ என நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது என்றார். (ம-3)

## பெரும்பான்மையை நிரூபித்தால்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கும் தமிழ்த் தேசியக்

## கூட்டமைப்பை...

இரவு முக்கிய சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே அரசி யல் கைதிகளின் விடுதலை தொடர் பில் பேச்சு நடத்த வரும் திங்கட் கிழமை வருகை தருமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதி பதி அழைப்புவிடுத்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் 105 பேரையும் விடுவிப்பது தொடர் பான பொறிமுறை பற்றி ஆராய சிறப்புக் குழு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரத மர் மகிந்த ராஜபக்ஷவும் நியமித் துள்ளனர்.

அரசியல் கைதிகள் அனை வரும் சில வாரங்களுக்குள் விடு விக்கப்படுவர் என்று பிரதி அமைச் சர் அங்கஜன் இராமநாதன் தெரி வித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ம-3)

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே நேற்று இரவு 8.00 மணி தொடக் கம் சுமார் ஒரு மணி நேரம் பேச்சு இடம்பெற்றது. ஜனாதிபதி செயலகத் தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் நிறைவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் மருத்துவர் சிவமோகன், பிரதமர் மகிந்த ராஜபகஷவுக்கு எதிராக மற்றொரு நம்பிக்கை யில்லா பிரேரணை வரும் 5ஆம் திகதி பாராளுமன்றில் நிறை வேற்றுமாறு ஜனாதிபதி கோரி யிருந்தார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு விளக் கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பதவி நீக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று காலை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்தித்துப் பேசினார். வரும் 7ஆம் திகதி உயர் நீதிமன்றால் வழங்கப்படும் தீர்ப்பையடுத்தே பிரதமர் பதவி தொடர்பில் தான் முடிவை எடுப் பேன் என்று மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரி வித்திருந்தார்.

ஜனாதிபதியின் தீர்மானத் துக்குச் சாதகமாக உயர் நீதிமன் றம் தீர்ப்பளித்தால், தான் பிரதமர் பதவியில் தொடர்வேன் என்றும் ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு பாதகமாகத் தீர்ப்பளித்தால் பதவி யிலிருந்து விலகுவேன் என்றும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந் தார். (ம-3)

## ரணில் - மகிந்த...

எதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இதன்போது பேசிக் கொண்ட விடயங்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் இன்னும் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போதைய அரசியல் சர்ச்சையில் இவர்கள் இரு வரும் சந்திப்பில் ஈடுபட்டுள்ள மை யானது புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்துமென அரசியல் அவதானி கள் தெரிவித்துள்ளனர். (ம-3)

# தமிழர்களுக்கு தீர்வு இல்...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி வித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதர வாகச் செயற்படுவதே தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருக்கின்றது. தமிழர்களிற்கான தீர்வு உள்ளிட்ட விடயங்களுக்காக தாம் செயற்படுவதாகக் கூறும் கூட்டமைப்பு கடந்த மூன்று வருடங்களில் எதையுமே செய்யவில்லை. இந் நிலையில், வடக்கு, கிழக்கிற்கு கடந்த மூன்று வருடகால மாக எவ்வித அபிவிருத்திகளையும் முன்னெடுக்காத ஐக்கிய தேசிய கட்சியுடன் மீண்டும் கூட்டணி யமைப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது வடக்கு மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த அரசியல் ரீதியான உரிமைகளை தேசிய அரசாங்கம் பறித்தது.

மக்கள் விடுதலை முன்னணி யுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்குத் துரோகம் செய்கின்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மகிந்தவை பிரத...

த்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சி யடைந்து காணப்படுகின்ற நிலை யில் அதனை சிறந்த முறையில் பிரதமர் மகிந்த தலைமையிலான அரசாங்கம் கட்டியெழுப்பி அபிவிருத் தியை நோக்கி இட்டுச் செல்லவுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கு வேண்டிய தேவை களை மகிந்த அரசாங்கத்தினால் மாத்திரமே மேற்கொள்ள முடியு மெனவும் திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)


# வேலைவாய்ப்பு

**GMI கம்பனியின் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் கிளைகளுக்கான முகாமைத்துவ பயிற்சியுடன் கூடிய 40 பதவி வெற்றிடங்கள்.**

| | | |
|---|---|---|
| தகைமை | - | O/L, A/L |
| வயது | - | 18 - 25 வரை |

பயிற்சியின் போது – 16,500/= பின்னர் 4,5000/=, EPF + ETF, தங்குமிட வசதி இலவசம்.

நேர்முக தேர்வு திங்கள் முதல் புதன் வரை

நேரம் - 10.30 AM - 12.00 PM

076 770 7759

(6635)

மஹஜன சம்பத
திகதி 2018/11/30
சீட்டிழுப்பு இலக்கம் 3801
F 8 5 1 6 4 1

கொவிசெத
திகதி 2018.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 1959
D 16 37 48 80

தன நிதானய
திகதி 2018-11-30
சீட்டிழுப்பு இலக்கம் 82
I 12 18 45 49

மெகா பவர்
திகதி 30/11/2018
சீட்டிழுப்பு இலக்கம் 312
L 08 04 43 44 77

## பெற்றோல், டீசல்...

பெற்றோல் 92 மற்றும் 95 ஒக்ரைன், டீசல் சுப்பர் மற்றும் ஓட்டோ என்பனவற்றின் விலைகள் தலா 5 ரூபாயால் குறைக்கப்படுகிறது.

இதன்மூலம் 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை 135 ரூபாயாகவும் 95 ஒக்ரைன் 159 ரூபாயாகவும் ஓட்டோ டீசல் 106 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 131 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-3)

## வழக்கு திங்கள்...

நீதிப்பேரணை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களின் சமர்ப்பணங்கள் மன்றில் முன்வைக்கப்பட்ட நிலையில் வரும் திங்கட்கிழமை வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

122 பாராளுமன்ற உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, நேற்று முற்பகல் 11.20 மணியளவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த மனுவுக்கு எதிராக அடிப்படை எதிர்ப்பு மனு தாக்கல் செய்யப்படும் என்று மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டவாளர்கள் தெரிவித்தனர். (ம-3)


**ICT WORLD**

Think Smart, Be Smart

37, Annasaththira Lane, Kanthamadam, Jaffna

புதிய கல்வி ஆண்டு 2019

ICT

தரம் - 10 , 11

(தமிழ், ஆங்கில , மொழி மூல வகுப்புக்கள்)

ஆரம்பம் - 01.12.2018

மாலை - 4:00 தரம் 10

மாலை - 5:00 தரம் 11

ஆசிரியர்

S.Umakanthan (BIT)

(ICT ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

0778888604

**வேலை ஆட்கள் தேவை**

- யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. உங்கள் சுயவிபரக்கோவையுடன் பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும். அனுபவம் உள்ளவர்களுக்கும் மும்மொழி தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
  **முக்கிய குறிப்பு:- அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**
- AD தர வாகன அனுமதிப்பத்திரம் உடைய சாரதி தேவை. (கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.)
- வீட்டுத்தோட்ட வேலைகள் செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. (தனியாகவோ அல்லது குடும்பமாகவோ தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.)
  கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.

**Sanjeys A-Z Mart,**
**No-100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)** (C-4448)

**விற்பனைக்கு**

பலாலி வீதி ஊரெழு மேற்கு NK மண்டபத்துக்கு அருகில் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

**0774402249** (6529)

**Science வகுப்புகள்**

Science (தனி, குழு வகுப்புக்கள்)
Grade 6 - 11
வீடு வந்து கற்பிக்கப்படும்.
**தொடர்பு: 0764853866** (6599)

**"ஆங்கில மொழிமூல கணிதபாட வகுப்புக்கள்"**

தரம் 6 - 11, கல்வியாண்டு - 2019
38, ராஜவீதி, நல்லூர்.
(சட்டநாதர் கோயில் அருகாமை)
19, நாயன்மார் வீதி, நல்லூர்.
(மூத்தவிநாயகர் கோயில் அருகாமை)
தொடர்பு: 0778645971, 0774361728 (6822)

பிரத்தியேக / குழுவகுப்புக்கள்
**A/L 2019 & DAY / A/L 2020**
**கணக்கீடு**
**MR. BALAKAJEN**
- கந்தர்மடச்சந்தி கந்தர்மடம் (Tue & Fri 5-7 P.M)
- கொழும்புத்துறை (Sat & Sun 2-5 P.M)

தொடர்புகளுக்கு : 075 077 5660, 076 565 5956 (6444)

**தரம் 6 முதல் O/L வரையான கணிதபாட வகுப்புக்கள்**

பல வருட அனுபவமுள்ள கொழும்பில் கல்வி கற்பித்த ஆசிரியரினால் வீடு வந்து தனியாகவோ, சிறு குழுவாகவோ மாதம் இரு பயிற்சிப் பரீட்சைகளுடன் Model Papers, Past Papers என்பவற்றினூடாக அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். கோண்டாவிலில் பிரத்தியேக, சிறிய குழு வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. தமிழ் மொழிமூல, ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடத்தப்படும்.

தொடர்பு: **077 577 6999** (6614)

**Techno World**
**A/L தொழில்நுட்ப பிரிவு**

**A/L - 2020**

| பெயர் (SFT) | புள்ளி |
|---|---|
| ஜெனந்தன் | 100 |
| அரோன் | 93 |
| ஜோன் கிரிஸ்ரோபர் | 88 |
| சேலக்சன் | 85 |
| சதுர்சாயினி | 84 |
| சங்கீர்த்தனன் | 83 |
| டிவ்வியா | 83 |
| **B.T** | |
| அரோன் | 90 |
| ஜோன் கிரிஸ்ரோபர் | 86 |
| **Agri** | |
| சதுர்சாயினி | 88 |
| பூஜிதா | 78 |
| **ICT** | |
| ஜெனந்தன் | 86 |
| அரோன் | 80 |
| **GEO** | |
| ஜோன் கிரிஸ்ரோபர் | 90 |

A/L 2020 மாணவர்கள் புதிய பாடங்கள் ஆரம்பம்: 03.12.2018

**தொடர்பு: 0770175346** (C-4566)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு **021 221 7603**

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்

UK - 550/=,
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 950/=

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார்.
3 - 5 Working Days (C-4468)

**31 ஆவது வருட கல்விச் சேவையில்**
**யாழ். நகரின் No.1 கல்வி நிறுவனம்**

புதிய **நாவலர்** கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்
தரம் 1 முதல் O/L வரை

புதிய கல்வியாண்டு - 2019
ஆரம்பம்: **02.12.2018**
ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

தமிழ் மொழிமூல வகுப்புக்கள் | ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

தொடர்பு: **0774598440** (க-4564)

**வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி (C-4517)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS


0768226240 (C-4462)

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் தம்பிஐயா இரட்ணசபாபதி (சின்னத்தம்பி)



கடந்த 01.11.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.12.2018) சனிக்கிழமையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. எனவே ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர் வளையம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசியூடாகவும், மின்னஞ்சல் ஊடாகவும் வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**இல.93, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.** (6632)

தாயின் மடியில்: 22.03.1926
இறைவன் அடியில்: 01.11.2018

- குடும்பத்தினர்

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்



**திதி: 01.12.2018**

வீட்டின் ஒளிவிளக்காய் நின்றுவிட்டு
இருள் தந்து போனதுமேன்
எம்மை விட்டு உருண்டோடிய
ஆண்டுகள் உள்ளத்துயர்
ஆற்றவில்லை
இன்றும் உங்கள் நினைவே
உள்ளத்தை வாட்டுதப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

தோற்றம்: 25.09.1928
மறைவு: 07.12.2012

"தண்ணிழல்"
01-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி. (6547)

- குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.